தினமணி

**தேங்காய் எண்ணெய் விலை உயருமா?**

First Published : 10 Jan 2011 05:52:11 AM IST



சென்னை, ஜன. 9: சத்துணவில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்படும் என்ற அரசு அறிவிப்பால் வெளிச் சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை உயருமோ என்று பொது மக்களிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது.

சத்துணவில் தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்படுவது குறித்த அறிவிப்பு வெள்ளிக்கிழமை ஆளுநர் உரையில் வெளியானது.

சத்துணவு, அங்கன்வாடி என பல்வேறு பெயர்களில் சுமார் 80 லட்சம் குழந்தைகள் மதிய உணவு திட்டத்தால் பயன் பெறுகிறார்கள். ஒரு குழந்தைக்கு ஒரு நாளுக்கு 3 கிராம் என்ற அளவில் பாமாயில் பயன்படுத்தப்படுகிறது.

இதற்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் பயன்படுத்தினால் ஒரு நாளுக்கு மாநிலம் முழுக்க சுமார் 24 ஆயிரம் கிலோ எண்ணெய் தேவைப்படும். மாதம் சுமார் ஆறு லட்சம் கிலோ தேங்காய் எண்ணெய் அரசுக்கு மட்டும் தேவைப்படும்.

வெளிநாடுகளில் பாமாயில் கொள்முதல் செய்து கொண்டு வருவதில் உள்ள இடர்பாடுகள் அரசுக்கு இனி வெகுவாகக் குறைந்துவிடும்.

தென்னை மரம் வைத்துள்ள விவசாயிகளுக்கு இது மகிழ்ச்சியான செய்தி. தேங்காய் விலை குறைந்துவிடாமல் இருப்பதற்கு இத் திட்டம் உதவும்.

ஆனால் வெளிச்சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்துவிடுமோ என்ற அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே கடலை எண்ணெய், சுத்திகரிப்பு செய்த மற்ற எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் கைக்கு எட்டாத உயரத்தில் இருக்கின்றன. தேங்காய் உற்பத்தியாளர்கள் மகிழும் அதே நேரத்தில் சாமானிய மக்களின் மாதாந்திரச் செலவு அதிகமாகும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

சத்துணவில் வாரத்தில் ஐந்து நாள்களும் முட்டை வழங்கப்படும் என கடந்த ஆண்டு செப்டம்பரில் முதல்வர் கருணாநிதி அறிவித்தார். அப்போது நாமக்கல்லில் முட்டையின் விலை ரூ. 2.35. அதன்பிறகு நவம்பரில் ரூ. 2.05 வரை குறைந்தது. சபரிமலை சீசன் என்பதால் அப்போது விலை குறைந்ததாக வியாபாரிகள் கூறுகின்றனர். இப்போது முட்டை விலை ரூ. 2.98 பைசா. கடைகளில் முட்டை விலை ரூ. 3.50 ஆக உயர்ந்துவிட்டது.

கிராமப் பகுதிகளில் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு செங்கல்லின் விலை ரூ. 10 வரை உயர்ந்துவிட்டது. மணல் விலையும் 4 மடங்கு உயர்ந்துள்ளது.

ஏற்கெனவே தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தில் வேலை பார்த்தாலும், வேலை பார்க்காவிட்டாலும் சம்பளம், ரேஷனில் ரூ. 1-க்கு ஒரு கிலோ அரிசி போன்ற திட்டங்களால் கிராமப் பகுதிகளில் விவசாய வேலைக்கு ஆள்கள் கிடைப்பதில்லை. வேலைக்கு வருவோரும் அதிகமான கூலி கேட்கின்றனர். இதனால் விவசாய விளைபொருள்களின் உற்பத்தி விலை அதிகமாகிறது. இதன் தொடர்ச்சியாக சந்தை விலையும் அதிகமாக உள்ளது.

வெளிச் சந்தையில் அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறிகள் என பெரும்பாலானவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன.

இப்போது கிலோ ரூ. 110க்கு விற்கப்படும் தேங்காய் எண்ணெயின் விலை அடுத்த சில மாதங்களில் வெகுவாக உயரும் என்று வியாபாரிகள் கூறுகின்றனர்.

தமிழகத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி காங்கேயம் பகுதியில்தான் அதிக அளவு நடக்கிறது.

வட மாநிலங்களில் உணவுக்குப் பயன்படுத்தும் தேங்காய் கொப்பரை இப் பகுதியில் இருந்துதான் செல்கிறது. கேரளத்துக்கும் கொப்பரைத் தேங்காய் கொண்டு செல்லப்படுகிறது.

அரசின் புதிய திட்டத்தால் தேங்காய்க்கு கிராக்கி அதிகரிக்கும். எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வசதியாக ஆலைகளின் எண்ணிக்கை, திறன் ஆகியவற்றை காங்கேயம் பகுதியில் அதிகரிக்க வாய்ப்பு கிடைக்கும். அந்தப் பகுதியில் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைகிடைக்கும்.

இருந்தாலும் சந்தையில் எண்ணெய் விலை உயர்ந்துவிடாமல் அரசு உரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர்.

இத் திட்டத்துக்கு தேங்காய் எண்ணெய் வழங்குவதை தனியார் ஒப்பந்ததாரர்களிடம் வழங்காமல் தென்னை நல வாரியம் மூலமாகவே பெற வேண்டும் என விவசாயிகள் கோருகின்றனர்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை: ஜனவரி முதல் விநியோகம்**

First Published : 09 Jan 2011 01:43:18 PM IST

செய்யாறு, ஜன. 8: தமிழக வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு இலவசமாக அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அடையாள அட்டை மூலம் விவசாயிகள் வேளாண் துறை மூலம் வழங்கப்படும் இடுபொருள்கள் மற்றும் இதர பொருள்களை மானிய விலையில் வாங்கவும், அரசு வழங்கும் சலுகைகளை அதிகாரிகளின் பரிந்துரை இல்லாமல் எளிதில் பெறவும் முடியும். விவசாயிகள் விவசாயம் தொடர்பான சுற்றுலா செல்லும்போதும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வேளாண் கிடங்குகளில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் விவசாயி அடையாள அட்டையை ஒருமுறைப் பெற்றுவிட்டால் போதும், ரேஷன் அட்டையை போல ஆண்டுக்கணக்கில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

டிராக்டர், பவர் டில்லர் போன்ற வேளாண் உபகரணங்கள் வாங்க வங்கிகளில் கடன்பெறுவதற்கு இந்த விவசாயி அடையாள அட்டை சான்றிதழாக இருக்கும் என வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அடையாள அட்டையில் விவசாயின் பெயர், பிறந்ததேதி மற்றும் வயது, கல்வித்தகுதி, முகவரி, தொலைபேசி-கைபேசி எண்கள், மின் அஞ்சல் முகவரி, புன்செய், மானாவாரி நிலம் சர்வே எண், உட்பிரிவு, நன்செய் நிலம், மின் இணைப்பு விவரம், வங்கிக் கணக்கு எண், வங்கியின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும்.

இந்த விவசாயி அடையாள அட்டைகள் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செய்யாறு கோட்டம் உள்பட தமிழகம் முழுவதும் 2011 ஜனவரி முதல் வாரத்தில் இருந்து, அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாய வேளாண் கிடங்குகளில் இடுபொருள்கள் வாங்கும் போது விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது என செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் எ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை, ஜன. 8: மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கக் கோரி தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் செங்கம் துக்காப்பேட்டையில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் முன்பு வெள்ளிக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிளைத் தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார்.

இதுபோல் வந்தவாசியில் உதவி தொடக்க கல்வி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது(படம்). வட்டார துணைத் தலைவர் கா.முனவர்உசேன் தலைமை வகித்தார்.

**காதி தொழிற்சங்கங்களில் சுவைநீர் விற்பனை: தென்னை வாரியம் வரவேற்பு**

First Published : 10 Jan 2011 05:07:50 AM IST

சென்னை, ஜன. 9: பனை நுங்குச்சாறும், தென்னை இளநீரும் பக்குவப்படுத்தப்பட்டுத் தயாரிக்கப்படும் சுவை நீரை காதி கிராமத் தொழிற்சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படும் என்ற அறிவிப்பை தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் வரவேற்றுள்ளது.

இதன் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலை உயரும் என்று அந்த வாரியத்தின் தலைவர் ராஜ்குமார் மன்றாடியார் தெரிவித்துள்ளார்.

**இலவச பம்புசெட்டுகளின் இன்னொருமுகம்**

ஏ.வி. கருப்பசாமி

First Published : 10 Jan 2011 03:09:23 AM IST

நான்கு ஆண்டுகளுக்கு முன் மத்திய நிதியமைச்சராக ப. சிதம்பரம் இருந்தபோது ஐஎஸ்ஐ முத்திரை பெறாத பம்புசெட் நிறுவனங்கள் 8 சதவீத கலால் வரி செலுத்த வேண்டும் எனச் சட்டம் கொண்டுவந்தார். இது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களின் சந்தையை ஒரு சில பெரிய நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும் நோக்கம் கொண்டதாக இருந்தது. ஆகவே, கலால் வரியை ரத்து செய்யக் கோரி "கோப்மா' **(Kovai Power Driven Pumps and Spares Manufacturers Association)** தலைமையில் மாபெரும் போராட்டங்கள் நடந்தன.

அந்தப் போராட்டத்தின் எதிரொலியாக ப. சிதம்பரம் "கோப்மா' சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசி "ஐஎஸ்ஐ' முத்திரை பெறுவதற்கு 5 மாத கால அவகாசம் கொடுத்தார்.

அதற்குப் பின்னால் சிரமப்பட்டு தனியார் நிதி நிறுவனங்களில் ரூ. 5 லட்சம் கடன் வாங்கி "ஐஎஸ்ஐ' முத்திரை பெற்று, பலர் தொழில் நடத்தி வருகிறார்கள். "ஐஎஸ்ஐ' முத்திரை பெற்றதால் 1 சதவீதம்கூட சந்தை வாய்ப்புப் பெருகவில்லை. மாறாக உற்பத்திச்செலவு உயர்ந்ததால் இருக்கிற சந்தை வாய்ப்பும் பறிபோய் கொண்டிருக்கிற சூழலில் வாங்கிய கடன்களைக்கூட அடைக்க முடியாமல் பெரும்பாலான குறுந்தொழில் நிறுவனங்கள் சிரமத்தில் உள்ளன.

இந்தச் சூழ்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழக முதல்வர் 14 லட்சம் விவசாயிகளுக்கு இலவச பம்புசெட் தருவதாக அறிவித்தார். இந்த அறிவிப்பு ஒருபுறம் புரட்சியாகவும் மறுபுறம் மிரட்சியாகவும் இருந்தது. தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டம் படுபாதாளத்தில் போனதற்கு விவசாயி மட்டும் காரணமல்ல. நாம் ஒவ்வொருவரும்தான். எனவே, அவ்வளவு ஆழத்தில் இருந்து நீர் இரைத்து விவசாயம் செய்வதே சிரமமான வேலைதான். ஆகவே, விவசாயிகளின் சுமைகளைக் குறைக்கும் விதமாக அரசு அவர்களுக்கு இலவச மின்சாரமும் தர வேண்டும். பம்புசெட்டையும் இலவசமாகத் தருவது கொள்கை அளவில் சரியானது என்பதால் திட்டத்தை உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகள் வரவேற்றார்கள்.

ஆனால், கொள்முதல் யாரிடத்தில் செய்யப்போகிறார்கள் என்பதில் குழப்பமும் தயக்கமும் இருந்தது. இந்நிலையில் நூறு சதவிகிதம் தமிழகத்தில் கொள்முதல் செய்ய வேண்டும். அதில் ஐம்பது சதவிகிதம் குறுந்தொழில் கூடங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று பொதுவாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் 31-8-2010 அன்று கோவை மாவட்ட ஆட்சியர் கூட்டிய கூட்டத்தில் கலந்துகொண்ட சங்கப் பிரதிநிதிகள் தயக்கத்தையும், கோரிக்கையையும், மின்சிக்கனத்துக்கான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் தெரிவித்தனர். அரசுக்குப் பரிந்துரைப்பதாக ஆட்சியர் தெரிவித்தார்.

ஒருமாதம் கழித்து மின்வாரிய இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி ஷரத்து வெளியானது. பார்த்தவர்களுக்கு ஒரே அதிர்ச்சி. நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட நட்சத்திரக் குறியீடு நிபந்தனையாக்கப்பட்டிருந்தது.

பொதுவாக சிறிய நிறுவனங்களின் சந்தையைக் கைப்பற்ற பெரிய நிறுவனங்கள் சதா முயற்சித்துக் கொண்டிருக்கும்.

இந்தப் போட்டியில் சிறுதொழில் நிறுவனங்கள் காணாமல் போய்விட்டால் தொழிலில் ஏகபோகம் உருவாகி விலை பன்மடங்கு உயர்ந்துவிடும் என்கிற காரணத்தினாலும் சிறு தொழிலை நம்பியுள்ள பெரும்பான்மை மக்களின் வேலைவாய்ப்பை மனதில் கொண்டும் அரசு அவ்வப்போது மானியத்துடன் கடனும் சந்தைப்படுத்துவதற்கான உதவியும் குறிப்பாக அரசு கொள்முதலில் சிறுதொழிலுக்கு முன்னுரிமையும் கொடுத்து ஊக்கப்படுத்துவதையும் அரசு தன் கொள்கையாக வகுத்து வைத்துள்ளது.

அந்தக் கொள்கையின் காரணமாகத்தான் மின் வாரியம் தனக்குத் தேவையான பொருள்களில் எதைஎதை குறுந்தொழில்கள் செய்கின்றன என்பதைத் தேடிப்பிடித்து இருபது சதவீதம் அளவுக்குக் கட்டாயமாகக் கொள்முதல் செய்கிறது. பம்புசெட் விஷயத்தில் இந்தக் கொள்கை ஏன் கைவிடப்பட்டது என்பது புரியாத புதிராக உள்ளது.

பெரிய, சிறிய பம்புசெட் உற்பத்தியாளர்களுக்கு இடையிலான சந்தைப் போட்டியில் குறுந்தொழில்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய அரசு, வேலியே பயிரை மேய்ந்த கதையாகத் தன்னுடைய கொள்முதலில் பெரிய நிறுவனங்களுக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறது. இவ்வளவு அநியாயங்களும் மின் சிக்கனம் என்கிற பெயரில் நடந்தேறியுள்ளது. 415 வோல்டேஜ் திறனுக்கு வடிவமைக்கப்பட்ட மூன்று நட்சத்திரக் குறியீடுள்ள மோட்டார்களை தமிழகமெங்கும் பொருத்திவிட்டு பத்து சதவீதம் மின் சிக்கனத்தை உறுதிப்படுத்துகிற அளவுக்கு கட்டுமான வசதி உள்ளதா என மின் வாரியத்திடம் கேட்டால் தரமான பதில் இதுவரை கிடைக்கவில்லை.

அரசு இலவசமாகக் கொடுப்பது ஒருபுறமிருக்கட்டும்; இலவச மின் இணைப்பு பெறும் ஒவ்வொரு விவசாயியும் குறிப்பிட்ட நிறுவன மோட்டாரைத்தான் வாங்க வேண்டும் என

நிர்பந்திக்கிறார்களே இது எந்த விதத்தில் நியாயம்? இலவச மின் இணைப்பு கேட்டு பத்து ஆண்டுகளாகக் காத்திருக்கும் விவசாயி, "மவராசன் இலவச இணைப்பு கொடுக்கிறார் மோட்டார் விலை பத்தாயிரம் உயர்ந்திருந்தாலும் பரவாயில்லை' எனக் கொள்முதல் செய்வார்.

நட்சத்திரக் குறியீடு சான்று என்பது இந்திய அரசின் மின் சிக்கன அமைவகத்தால் (ஃபிரோ அஃப் எலக்ட்ரிகல் எபிசன்ஸி பிஇஇ) வழங்கப்படுவதாகும். இந்த நட்சத்திரக் குறியீடு சான்று பெற விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் ஏற்கெனவே ஐஎஸ்ஐ முத்திரையும் ஐஎஸ்ஓ சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும் என்பது நிபந்தனை. பிஇஇ சான்று வழங்கும் நிறுவனம் நேரடியாக நிறுவனத்தையோ, உற்பத்தி செய்த பொருள்களையோ சோதித்துப் பார்ப்பதில்லை. மாறாக உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பம்புசெட் "மாதிரிகளை' தனியார் நிறுவனமான சிட்டார்க், மத்திய அரசின் நிறுவனமான எம்எஸ்எம்இ ஆகிய சோதனைக் கூடங்களில் ஏதாவது ஒன்றில் சோதனை செய்து அறிக்கை பெற்று அந்த அறிக்கையை "பிஐஎஸ்' நிறுவனத்தில் கொடுத்து சரிபார்த்து சான்றிதழ் பெற வேண்டும். இந்தச் சான்றிதழை வைத்து தில்லியிலுள்ள மத்திய அரசின் பிஇஇ நிறுவனத்துக்கு இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்து பெறுவதே நட்சத்திரக் குறியீடு சான்றிதழ் ஆகும்.

"ஐஎஸ்ஐ' முத்திரை பெறும் பம்புசெட்டுகள் "மாடலுக்கு'த் தகுந்தபடி அதிகபட்சம் குறிப்பிட்ட அளவுதான் மின்சக்தியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற விதி இருக்கிறது. இதை அடிப்படையாக வைத்துத்தான் நட்சத்திரக் குறியீட்டு எண்ணிக்கை முடிவு செய்யப்படுகிறது. அதாவது ஐஎஸ்ஐ முத்திரை பெற அனுமதித்துள்ள அதிகபட்ச மின்சக்திக்கு 1 நட்சத்திர அந்தஸ்தும், அதிலிருந்து 5 சதவிகிதம் மின்சக்தி குறைந்தால் இரண்டு நட்சத்திர அந்தஸ்தும், 10 சதவீதத்துக்கு 3 நட்சத்திரம், 15 சதவீதத்துக்கு 4 நட்சத்திரம், 20 சதவீதம் குறைந்தால் 5 நட்சத்திரக் குறியீட்டு அந்தஸ்தும் கிடைக்கும்.

தமிழ்நாடு மின்வாரியம் 3 நட்சத்திரக் குறியீடு உள்ள மோட்டார்களை இலவசத் திட்டத்துக்கு அனுமதித்திருப்பதன் மூலம் 10 சதவீத மின் சிக்கனத்தை அளிக்கும் மோட்டார்களை ஏற்றுக்கொள்கிறது. மின்வாரிய அதிகாரிகளால் பிஐஎஸ் கொடுக்கும் தரச்சான்றுகளை வைத்தே 10 சதவீதத்துக்கு மேல் மின் சிக்கனத்தை அளிக்கக்கூடிய மோட்டார்களை இனம் கண்டு அனுமதிக்க முடியும்.

இந்நிலையில், 5-10-10 அன்று மின் வாரிய ஒப்பந்தத்தின் அறிவிப்பு இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிறுவனங்களின் சொத்து மதிப்பு பதினைந்து கோடி இருக்க வேண்டும். ஆண்டு விற்பனை முப்பது கோடி இருக்க வேண்டும். குறைந்தது நூறு தொழிலாளர்களை பணியில் அமர்த்தி இருக்க வேண்டும். பத்து லட்சம் பிணையத்தொகை செலுத்த வேண்டும். ஐம்பது லட்சம் வங்கி பிணையம் கொடுக்க வேண்டும். இவை யாவும் குறுந்தொழில் உற்பத்தியாளர்களால் கொடுக்க முடியாது என்பதைத் தெரிந்தே செய்துள்ளார்கள். இவ்வளவுக்கும் மேல் சப்ளை செய்த பொருள்களுக்குப் பணப்பட்டுவாடாவைப் பொறுத்தவரை புதிய பம்புசெட்

மாற்றியதால் எவ்வளவு யூனிட் மின்சாரம் மிச்சப்படுகிறதோ அதில் ஒரு யூனிட்டுக்கு ரூ. 3.65 வீதம் கணக்கிட்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பட்டுவாடா செய்யப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இந்த விதிகளை ஏற்றுக்கொண்டு பெரிய உற்பத்தியாளர்கள் உள்பட யாரும் டெண்டர்களில் பங்கேற்கவில்லை. இதைத்தான் மின்சார வாரியம் எதிர்பார்த்துள்ளது. இதில் உண்மையான உற்பத்தியாளர்கள் யாரும் பங்கேற்க மாட்டார்கள்.

மின்சிக்கனம் இருப்பதை வாதத்துக்கு ஒப்புக்கொள்ளலாம். ஆனால், எவ்வளவு மின் சிக்கனத்தை இவர்கள் கொண்டுவரப் போகிறார்கள்? அதனால் எவ்வளவு ரூபாய் அரசுக்கோ அல்லது மின்வாரியத்துக்கோ மிச்சப்படும்? இலவச பம்புசெட் திட்டத்தில் 14 லட்சத்து 67 ஆயிரம் மோட்டார்களை வழங்கப்போவதாக அறிவித்துள்ளார்கள். 5 குதிரை திறன் உள்ள ஒரு மோட்டார் 1 மணி நேரம் இயங்குவதற்கு 5 யூனிட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஒரு நாளைக்கு 10 மணி நேரம் ஓடினால் 50 யூனிட். ஆண்டுக்கு 300 நாள்களுக்கு இயங்குவதாகக் கொண்டால் 15,000. இதைப் பணமாகக் கணக்கிட்டால் (1 யூனிட் மின்சாரத்துக்கான உற்பத்திச் செலவு ரூ. 3) 45,000 ஆக 10 அல்லது 15 சதவீதம் மின்சாரம் சேமிக்கப்படுவதால் ஒவ்வொரு விவசாய பம்புசெட்டும் ஆண்டுக்கு ரூ. 5,000 மிச்சப்படுத்துகிறது. ஆக மொத்தம் எழுநூற்று முப்பத்து மூன்று கோடியே ஐம்பது லட்சம். ஆக ஐந்தாண்டுகளில் ரூ. 3,667,5000000 மிச்சப்படுத்துவதற்காக அரசு செலவழிக்கும் தொகையோ ஐந்தாயிரம் கோடி.

இந்தக் கோடிகளை அரசு கையிருப்பில் இருந்து கொடுப்பதாக இல்லை. மூன்றாம் நபரிடம் வட்டிக்கு வாங்குகிறார்கள். இந்த வட்டி 5 ஆண்டுகளுக்கு குறைந்தபட்சம் 40 சதவீதம் ஆகுமல்லவா? ஆக, ரூ. 3,500 கோடியை மிச்சப்படுத்த ரூ. 7,000 கோடி செலவு செய்யப்போகிறார்கள். அப்போதும் 10 சதவீதம் மின் சேமிப்புக்கு உத்தரவாதமில்லை.

இந்தத் திட்டத்தில் ரூ. 1,500 கோடி அளவுக்கு ஊழல் நடக்க வாய்ப்புள்ளதால் அந்த ஒப்பந்தப்புள்ளியை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அரசு வழக்கைச் சந்தித்து மின் வாரிய தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்லாமல் ஒப்பந்தப்புள்ளி திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பின் அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டதுதான் இரண்டு லட்ச மின் இணைப்புத் திட்டம்.

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் 4 நட்சத்திர முத்திரை உள்ள பம்பு செட்டுகளை வாங்கினால்தான் இலவச மின்சாரம் என அறிவித்து 1 மாதத் தவணைக்குள் செய்யவேண்டும் என நிர்பந்திப்பதன்மூலம் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி 50 சதவீதம் விலையை உயர்த்தி விற்கத் துணைபுரிந்துள்ளார்கள். இது தமிழக விவசாயிகளுக்கும், சிறு, குறு உற்பத்தியாளர்களுக்கும் செய்கிற துரோகமாகும்.

இலவச இணைப்புப் பெறும் ஒவ்வொரு விவசாயிகளும் இந்த நட்சத்திர அந்தஸ்து உள்ள மோட்டார் பம்புசெட்டுகளை வாங்குவதால் ரூ. 5 ஆயிரத்திலிருந்து 15,000 வரை இழக்க

வேண்டியுள்ளது. இந்த நிறுவனம் மோட்டார்களைத்தான் வாங்க வேண்டும் என விவசாயிகளை நிர்பந்திப்பதே உரிமை மீறலாகும்.

இவ்வளவு சிரமம் மேற்கொண்டு நம்முடைய ஆட்சியாளர்கள் இந்தத் திட்டங்களை மேற்கொள்வது விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் திட்டத்தை உறுதிப்படுத்தவா? அல்லது இலவச மின்சாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்கிற உலக வங்கி மற்றும் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைகளைப் படிப்படியாக நிறைவேற்றவா?

கட்டுரையாளர்: (நிறுவனத் தலைவர் - "கோப்மா')

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை: ஜனவரி முதல் விநியோகம்**

First Published : 09 Jan 2011 01:43:18 PM IST

செய்யாறு, ஜன. 8: தமிழக வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு இலவசமாக அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அடையாள அட்டை மூலம் விவசாயிகள் வேளாண் துறை மூலம் வழங்கப்படும் இடுபொருள்கள் மற்றும் இதர பொருள்களை மானிய விலையில் வாங்கவும், அரசு வழங்கும் சலுகைகளை அதிகாரிகளின் பரிந்துரை இல்லாமல் எளிதில் பெறவும் முடியும். விவசாயிகள் விவசாயம் தொடர்பான சுற்றுலா செல்லும்போதும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வேளாண் கிடங்குகளில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் விவசாயி அடையாள அட்டையை ஒருமுறைப் பெற்றுவிட்டால் போதும், ரேஷன் அட்டையை போல ஆண்டுக்கணக்கில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

டிராக்டர், பவர் டில்லர் போன்ற வேளாண் உபகரணங்கள் வாங்க வங்கிகளில் கடன்பெறுவதற்கு இந்த விவசாயி அடையாள அட்டை சான்றிதழாக இருக்கும் என வேளாண் அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அடையாள அட்டையில் விவசாயின் பெயர், பிறந்ததேதி மற்றும் வயது, கல்வித்தகுதி, முகவரி, தொலைபேசி-கைபேசி எண்கள், மின் அஞ்சல் முகவரி, புன்செய், மானாவாரி நிலம் சர்வே எண், உட்பிரிவு, நன்செய் நிலம், மின் இணைப்பு விவரம், வங்கிக் கணக்கு எண், வங்கியின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கும்.

இந்த விவசாயி அடையாள அட்டைகள் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த செய்யாறு கோட்டம் உள்பட தமிழகம் முழுவதும் 2011 ஜனவரி முதல் வாரத்தில் இருந்து, அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாய வேளாண் கிடங்குகளில் இடுபொருள்கள் வாங்கும் போது விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது என செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் எ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை, ஜன. 8: மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கக் கோரி தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் செங்கம் துக்காப்பேட்டையில் உள்ள உதவித் தொடக்கக் கல்வி அலுவலகம் முன்பு வெள்ளிக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிளைத் தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார்.

இதுபோல் வந்தவாசியில் உதவி தொடக்க கல்வி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது(படம்). வட்டார துணைத் தலைவர் கா.முனவர்உசேன் தலைமை வகித்தார்.

**கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை தொடக்கம்: விலை வீழ்ச்சி**

First Published : 09 Jan 2011 12:45:48 AM IST



கடலூர், ஜன. 8: கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை தொடங்கிவிட்டது. ஆனால் நெல் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும் நெல் வாங்குவதற்கு வியாபாரிகள் வரவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

÷கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டு உள்ளது. இதில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் மட்டும் 1.45 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டு இருந்தது.

÷வடகிழக்குப் பருவமழையின் தாக்கத்தால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலங்களில் சம்பா நெல் பயிர் அழுகி சேதம் அடைந்து விட்டது.

÷எனினும் காவிரி நீர் முன்னதாக கிடைத்த பகுதிகள் மற்றும் நாற்றங்கால் பணிகளுக்கு ஆழ்குழாய் பம்புசெட் வசதி உள்ள பகுதிகளில், தற்போது நெல் விளைந்து அறுவடைக்குத் தயாராகிக் கொண்டு இருக்கிறது.

÷இந்த ஆண்டு சம்பா பருவத்தில் பெரும்பாலும் பிபிடி சன்ன ரகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

÷அடுத்தபடியாக வெள்ளைப் பொன்னி, ஏ.டி.டி. 39, சி.ஆர். 1009 உள்ளிட்ட ரகங்களும் அதிகம் பயிரிடப்பட்டு உள்ளது.

÷காவிரி நீர் பாயும் வடவாறு பாசனப் பகுதிகளான தொரப்பு, ஷண்டன், பூவிழந்தநல்லூர் உள்ளிட்ட கிராமங்களிலும், வீராணம் ஏரி பாசனப் பகுதிகளில் ஆழ்குழாய் பம்பு செட் வசதி உள்ள கிராமங்களிலும் 500 ஏக்கரில் நெல் அறுவடை தொடங்கி விட்டது. ÷இயந்திரங்கள் மூலம் அறுவடை நடைபெற்று வருகிறது.

÷ஆனால் நெல் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்து கிடப்பதாக விவசாயிகள் குமுறுகிறார்கள். பிபிடி சன்னரகம் நெல், மூட்டை (62 கிலோ) ரூ. 620-க்குத்தான் விலை போவதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

÷கையிருப்பு உள்ள பழைய நெல்லைக்கூட வாங்க நாதியில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

÷அதே நேரத்தில் வீராணம் ஏரியின் எதிர் கரையில் உள்ள அறந்தாங்கி, சித்தமல்லி, கருணாகரநல்லூர், அகரம்புத்தூர் உள்ளிட்ட 10 கிராமங்களில் பயிரிடப்பட்ட சம்பா நெல், 10 ஆயிரம் ஏக்கரில் விளைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெல்லை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கிறார்கள்.

÷வயல்களில் ஒன்றரை அடி உயரத்துக்குத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இந்த நீரை வடியவைக்க முடியாத நிலையும், அதனால் அறுவடை இயந்திரங்கள் வயல்களுக்குள் செல்ல முடியாத நிலையும் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷இது குறித்து கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் காட்டுமன்னார்கோவில் கண்ணன் கூறுகையில், "காவிரி நீர் முன்னரே கிடைக்கப் பெற்ற பகுதிகளிலும், ஆழ்குழாய் கிணற்றுப் பாசனப் பகுதிகளிலும் நெல் அறுவடை தொடங்கிவிட்டது.

÷ஆனால் நெல் வாங்குவதற்குத்தான் வியாபாரிகளைக் காணோம்.

÷நெல் வாங்க வரும் ஒன்றிரண்டு வியாபாரிகளும், அடிமாட்டு விலைக்குக் கேட்கிறார்கள். ÷பிபிடி சன்ன ரகம் நெல் மூட்டை ரூ. 620 முதல் ரூ. 7,630 வரைதான் கேட்கிறார்கள். ÷இந்த விலை விவசாயிக்குக் கட்டுபடியாகாது. அதே நேரத்தில் என்னிடம் இருப்பு வைத்து உள்ள வெள்ளைப் பொன்னி நெல்லை வாங்குவதற்கே ஆள்இல்லை.

÷தமிழகத்தில் எல்லோரும் ஆந்திரம், கர்நாடகம் பொன்னி அரிசியை வாங்கிச் சாப்பிடத் தொடங்கி விட்டனர்.

÷இதன் காரணமாக தமிழகத்தில் நெல் அரவைத் தொழிலே நசிந்து விட்டது. இதனால் நெல் வியாபாரிகளும் குறைந்து விட்டனர்.

÷விவசாயிகளைக் காப்பாற்ற உடனடியாக அரசு நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும்' என்றார்.

÷மாவட்ட உழவர் மன்றங்களில் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் நெல் அறுவடை தொடங்கிய நிலையில், நெல் விலை வீழ்ச்சி அடைந்து கிடப்பதால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து இருக்கிறார்கள்.

÷அரசு நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தால்தான் விவசாயிகள் தலைதூக்க முடியும்.

÷அதே நேரத்தில் அரசின் தவறான நடைமுறையால், வீராணம் ஏரியின் எதிர்கரை பகுதிகளில், 10 கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கரில், நெல் விளைந்தும், அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

÷நெல் பயிர்கள் சாய்ந்து தண்ணீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. வீராணம் ஏரியில் வெள்ளிக்கிழமை நீர் மட்டம் 45.4 அடி. வடகிழக்குப் பருவமழை காலத்தில் 43 அடிக்கு மேல் நீரைத் தேக்குவது இல்லை என்று, முந்தைய ஆண்டுகளில் கடைபிடிக்கப்பட்டு வந்த கொள்கை, இந்த ஆண்டு கைவிடப்பட்டு விட்டது.

÷இதனால் ஏரி நீர் எதிர்கரை வழியாக, வயல்களில் புகுந்து ஒன்றரை அடி உயரம் வரை தேங்கி நிற்கிறது.

÷நீரை வடிய வைக்க முடியவில்லை. இந்த நிலங்கள் வீராணம் ஏரி நீரை நம்பி இல்லை. அனைத்தும் ஆழ்குழாய் பாசனப் பகுதிகள் ஆகும். உடனடியாக வீராணம் ஏரியின் நீர் மட்டத்தைக் குறைத்தால்தான் 10 ஆயிரம் ஏக்கரில் விளைந்துள்ள நெல்லை அறுக்க முடியும் என்றார்.

**மக்காச்சோளம் விற்பனை: விவசாயிகளுக்கு ஆலோசனை**

First Published : 09 Jan 2011 02:18:41 PM IST

அரியலூர், ஜன.8: அரியலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதனை தரம் பிரித்து விற்க வேண்டும் என்றார் பெரம்பலூர் வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) எஸ். சிவசங்கரன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் மக்காச்சோளத்தை வியாபாரிகளிடம் விற்பனை செய்யும்போது, நன்கு தரம் பிரித்து விற்பனை செய்ய வேண்டும். மேலும் மூட்டைகளை எடை போடும்போது, சரியான முறையில் எடையிட வேன்டும்.

வியாபாரிகள் பயன்படுத்தும் எடை இயந்திரம், எடைக் கற்கள் முத்திரை ஆய்வாளர் மூலம் நிகழாண்டில் முத்திரையிடப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து சரியான எடையில் நல்ல விலைக்கு விற்று பயன் பெற வேண்டும்.

மக்காச்சோளம் சாகுபாடியாளர்கள் தங்களது விளை பொருள்களை அரியலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு எடுத்து வந்து இருப்பு வைத்து, சரியான எடையில் நியாயமான விலைக்கு விற்று பயன் பெறலாம் என்றார் அவர்.

**குமரி மாவட்ட வேளாண் சேவை மையங்களில் விவசாய உபகரணங்கள் பெறும் வசதி**

First Published : 09 Jan 2011 01:21:24 PM IST

நாகர்கோவில், ஜன.8:கூட்டுறவு சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் சேவை மையங்களில் விவசாயிகள் வேளாண் உபகரணங்களைப் பெற்று பயன்பெறலாம் என்று மண்டல இணைப்பதிவாளர் ஆ.க. சிவமலர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வர் அறிவித்துள்ளபடி கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 76 வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மையங்களில் உழவு இயந்திரம், நெல் நாற்று நடும் இயந்திரம், சிறிய இழுப்பான், களை எடுக்கும் இயந்திரம், கைத்தெளிப்பான்கள், தென்னைமரம் ஏறும் கருவி, தேங்காய் உரிக்கும் கருவி மற்றும் விசைத்தெளிப்பான்கள், மண் மாதிரி எடுப்பதற்கு தேவையான ஆகர் கருவி ஆகியவையும், அந்தந்த மண்வாகு, சாகுபடி செய்யும் பயிரைப் பொறுத்து இதர வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கவும், கடன் மூலம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மை பொறியியல் துறையுடன் இணைந்து விவசாயத்துக்குத் தேவையான மினி டிராக்டர், பவர் டிரில்லர், விசைத் தெளிப்பான், நெல் நாற்று நடும் இயந்திரம் போன்ற வேளாண் உபகரணங்கள் மானிய விலையில் வேளாண் சேவை மையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே விவசாயிகள் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தை அணுகி அரசின் திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் சிவமலர்.

**மேச்சேரியில் தக்காளி விலை சரிவு!**

First Published : 09 Jan 2011 12:07:40 PM IST

மேட்டூர், ஜன. 8: சேலம் மாவட்டம் மேச்சேரியில் தக்காளி விலை திடீரென சரிந்துள்ளது.

மேச்சேரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மாணாவாரியாகவும், இறைவைப் பயிராகவும் தக்காளி பயிரிடப்படுகிறது. சமையலுக்கு மேச்சேரி தக்காளி தனி ருசியைக் கொடுப்பதாகக் கூறப்படுவதால், நல்ல கிராக்கி இருந்து வருகிறதி.

தற்ப்போது இங்கு தக்காளியின் சீசன் களைகட்டி உள்ளது. தக்காளி வரத்து அதிகரித்துள்ளதாலும், வெளியூர் மொத்த வியாபாரிகள் வராததாலும் தக்காளி விலை 15 சதவிகிதம் வரை குறைந்துள்ளது.

கடந்த வாரம் 15 கிலோ எடை கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.250 வரை விற்கப்பட்டது. இந்த வாரத்தில் ரூ.215 முதல் ரூ.225 வரை விற்கப்படுகிறது.

தக்காளி சீசனில் மேச்சேரி வட்டாரத்தில் மூன்று மாதங்களுக்கு 5ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு கூடுதல் தண்ணீர் திறப்பு**

First Published : 09 Jan 2011 12:10:39 PM IST

மேட்டூர், ஜன. 8: மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் மழையை பெய்ததைத் தொடர்ந்து மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. பின்னர் நீரின் அளவு இம் மாதம் 5-ந் தேதி வினாடிக்கு 3 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

தற்ப்போது காவிரி டெல்டா பகுதியில் மழை இல்லாத காரணத்தால் பாசனத் தேவை அதிகரித்துள்ளது. இதனால், சனிக்கிழமை மாலை முதல் பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 8 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை பகல் 12 மணிக்கு அணையின் நீர் மட்டம் 118.35 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,456 கன அடிவீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. நீர் இருப்பு 90.86 டி.எம்.சியாக இருந்தது.

**வெங்காய விலையைக் குறைக்க விளைச்சலை மேம்படுத்த வேண்டும்**

First Published : 09 Jan 2011 11:17:11 AM IST

திருப்பூர், ஜன. 8: அதிகரித்து வரும் வெங்காயத்தின் விலையைக் குறைக்கும் அதேநேரத்தில், விளைச்சலை மேம்படுத்தவும் அரசு திட்டமிட வேண்டும் என்று, கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து திருப்பூர் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை கூறியது:

வெங்காயத்தை வியாபாரிகள் பதுக்கிவைத்து தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதாலேயே விலை அதிகமாகியுள்ளதாகக் கூறுவதில் உண்மையில்லை. நாடுமுழுவதும் மழை அதிக மாகப் பெய்ததால் ஏற்பட்ட விளைச்சல் பாதிப்பே வெங்காயத் தட்டுப்பாட்டுக்கு முக் கிய காரணம்.

அதிகரித்து வரும் வெங்காயத்தின் விலையைக் குறைக்க அரசு முயற்சி மேற்கொள்ளு ம் அதேநேரத்தில், விளைச்சலை அதிகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு ஏக்கரில் வெங்காயம் சாகுபடி செய்ய வெங்காய விதை 2 கிலோ தேவைப்படுகிறது. விதை வெங்காயமாக விதைக்கும்போது 700 கிலோ வெங்காயம் தேவைப் படுகிறது.

ஆனால், தற்போது விதை வெங்காயம் ஒரு கிலோ ரூ. 50 முதல் ரூ. 60 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் விதையை வாங்கி பயிரிடுவதே நல்லது. தற்போது ஒரு கிலோ விதை

வெங்காயம் ரூ. 1,200க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சொட்டு நீர் பாசனத்துக்கு அரசு வழங்கும் 65 சதவீத மானியத்தில் 10 சதம் மட்டுமே விவசாயப் பலனை ஏற்படுத்துகிறது. மீதம் அரசு அதிகாரிகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் மட்டுமே பலனளிக்கிறது. அத்திட்டத்தை அரசு முறைப்படுத்த வேண்டும்.

ஊரக வேலையுறுதித் திட்டத்தால் தற்போது விவசாயத்தொழிலுக்கு ஆட்கள் கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தில் விவசாயப் பணியையும் இணைத்து செயல்படுத்த வேண்டும்.

இலவச மின்சாரம் 2 லட்சம் இணைப்பு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால், மின்வாரியம் விதிக்கும் கெடுபிடி காரணமாக 2 ஆயிரம் இணைப்புகள் மட்டுமே வழங்கப்படும் என்று தெரிகிறது.

விவசாயிகளுக்கு அரசு திட்டங்களின் பலன் முழுமையாகச் சென்றுசேர தகுந்த நடவடிக்கைகள் எடுக்கக் கோரி, கோவையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றார்.

**விதை வெங்காயத்துக்கு வியாபாரிகளிடம் கையேந்தும் விவசாயிகள்!**

என்.தமிழ்ச்செல்வன்

First Published : 09 Jan 2011 11:12:16 AM IST

திருப்பூர், ஜன.8: விதைக்கத் தேவையான வெங்காயம் இல்லாமல் வெளி மாவட்ட வியாபாரிகளிடம் கையேந்தும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். பதுக்கல் காரணமாக உச்சம் தொட்ட வெங்காய விலையால் விதை வெங்காயத்தையும் அதிக விலை கொடுத்து வாங்கும் அவல நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் பொங்கலூர், குண்டடம், குடிமங்கலம், பல்லடம், உடுமலை, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1,500 ஹெக்டர் பரப்பளவில் சின்னவெங்காயமும், ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் பெரிய வெங்காயமும் சாகுபடி செய்யப்படுகின்றன. அதன் படி, இம்மாவட்டத்திலிருந்து ஆண்டுக்கு சுமார் 25

ஆயிரம் மெட்ரிக் டன் சின்ன வெங்காயமும், சுமார் 15 மெட்ரிக் டன் பெரிய வெங்காயமும் அறுவடை செய்யப்பட்டு பல்வேறு மாநிலங்கள், பல்வேறு நாடுகளுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.

திருப்பூர் பனியன் நிறுவனங்களின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து விவசாயத்துக்குத் தேவையான ஆட்கள் கிடைக்காததை அடுத்து ஆண்டுதோறும் வெங்காயம் உள்ளிட்ட பயிர் சாகுபடி அளவு குறைந்து வருவதுடன், அப்பகுதி விவசாயிகள் அறுவடை செய்யும் வெங்காயத்தை நேரடியாக

விற்பனை செய்ய முடியாமல் தங்கள் நிலங்களுக்கு வரும் வியாபாரிகளிடம் கட்டுபடியாகக்கூடிய விலைக்கு விற்றுவிடுகின்றனர். இதனால், தங்கள் உற்பத்திப்பொருட்கள் மீதான செல்வாக்கு வியாபாரிகளுக்கு தாரை வார்க்கப்படுகிறது. அதன்படி, குறைந்தபட்ச விலைக்கு வாங்கும் வியாபாரிகள் பதுக்கிவைத்து விளைச்சல் குறைந்த தற்போதைய சூழ்நிலையில் அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபம் ஈட்டுகின்றனர்.

பொங்கலூர், பல்லடம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தைப்பட்டத்தில் விதைக்க விவசாயிகள் தேக்கி வைத்திருந்த பெரும்பாலான விதை வெங்காயங்கள் கடந்த 2 மாதங்களாக பெய்த தொடர் மழையில் நாசமாயின. தற்போது தைப்பட்டம் நெருங்கி வரும் நிலையில் விதைக்கத் தேவையான வெங்காயம் இல்லாமல் வெளி மாவட்ட வியாபாரிகளிடம் கையேந்தும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அதன்படி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விதைக்கத் தேவையான வெங்காயங்களை வாங்கி வருகின்றனர். அதுவும் கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை என்ற அதிகபட்ச விலைக்கு.

சாகுபடி செய்யும் விவசாயிக்கே தற்போது விதைக்க வெங்காயம் இல்லாத நிலை ஏற்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது.

இதுகுறித்து, பொங்கலூரை அடுத்த திருமலைநாய்க்கன்பாளையம் விவசாயி சுப்பிரமணி கூறுகையில், ஒரு ஏக்கரில் விதைக்கத் தேவையான 500 கிலோ விதை வெங்காயத்தின் தற்போதைய விலை ரூ.20,000. அதை விதைத்து சாகுபடி செய்யும் வரை ஆகும் செலவு ரூ.25,000. அதன்மூலம் 120 முதல் 140 நாட்களுக்கு பிறகு ஒரு ஏக்கரின் 7 ஆயிரம் கிலோ வெங்காயம் சாகுபடி செய்ய முடியும்.

அதன்படி, ஒரு கிலோ ரூ.15 வரை வியாபாரிகளிடம் எதிர்பார்க்க முடியும் என்றால் 7 ஆயிரம் கிலோவுக்கு ரூ.1 லட்சம் முதல் 1.05 லட்சம் கிடைக்கலாம். செலவை ஒப்பிடுகையில் விவசாயிகளுக்கு 4 மாதங்களுக்கு பிறகு ஒரு ஏக்கரில் அதிகபட்சம் ரூ.60 ஆயிரம் மட்டுமே பெற முடியும். ஆனால், விவசாயிகளிடம் இருந்து வாங்கிவிற்கும் வியாபாரிகள் உடனுக்குடன் அத்தொகையை பெற்றுவிடுகின்றனர்.

இந் நிலையில், தற்போது விதைக்கத் தேவையான வெங்காயத்தையும் அதிகப்படியான விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் பெரும்பாலான

விவசாயிகள் வெங்காயம் விதைப்பதை நிறுத்தி வைத்துள்ளனர். இப்பிரச்னையில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி விதைக்குத் தேவையான வெங்காயத்தை குறைந்த விலைக்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதிகரித்து வரும் வெங்காயத்தின் விலை நுகர்வோர் மத்தியில் மட்டுமின்றி தற்போது விவசாயிகளிடமும் கண்ணீரை வரவழைத்துக் கொண்டுள்ளது. சந்தையில்

வெங்காயத்தின் விலையை குறைக்கும் முன்பு விளைச்சலுக்கு தேவையான விதை வெங்காயத்தின் விலையை உடனடியாக குறைக்க வேண்டியது அரசின் கடமை.

**தோட்டக்கலைத் துறை மூலம் இடுபொருள் விநியோக முனைப்பு முகாம்**

First Published : 09 Jan 2011 02:12:45 PM IST

கரூர், ஜன. 8: கரூர் செல்லாண்டிப்பாளையத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் தோட்டக்கலை இடுபொருள்கள் விநியோக முனைப்பு இயக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறை மூலம் மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு மானியங்களை வழங்குவதற்காக அவர்களைத் தேர்வு செய்து பயனாளி அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான தேர்வு முகாம் கரூர் அருகேயுள்ள செல்லாண்டிப்பாளையத்தில் நடைபெற்றது. முகாமிற்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் தலைமை வகித்தார்.

வட்டார தோட்டக்கலை அலுவலர் ஆ. நடராஜன் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மத்திய, மாநில திட்டப் பணிகள் குறித்து விளக்கினார்.

பள்ளபாளையம் ஊராட்சித் தலைவர் ஜி. கோவிந்தராஜ் முன்னிலை வகித்து, விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கிப் பேசினார். துணை தோட்டக்கலை அலுவலர் ஜானகி, நுன்னீர் பாசனம் அமைக்க 65 சத மானியம் வழங்கப்படும் விவரத்தைக் கூறி, நுன்னீர் பாசனம் அமைப்பதன் அவசியம் குறித்து விளக்கினார்.

இதில், மஞ்சள் சாகுபடி செய்யும் ஏராளமான விவசாயிகளுக்கு பயனாளி அடையாள அட்டை வழங்கப்பட்டது. வட்டார தோட்டக்கலை உதவி அலுவலர் பி.ஒ. சுமதி நன்றி கூறினார்.

**"புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்துகொள்ள வேண்டும்'**

First Published : 09 Jan 2011 01:02:04 PM IST

தேவகோட்டை, ஜன. 8: புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்துகொள்ள வேண்டும் என தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கியல் அறிவியல் துறை இயக்குநர் கதிரேசன் தெரிவித்தார்.

தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற அறிவியல் மேளாவில், விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில்

அவர் பேசியது:

விவசாயிகள் வேளான் அறிவியல் நிலையத்திற்கு சென்று, தற்போது வந்துள்ள நவீன தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் லாபகரமாக விவசாயம் செய்ய இயலும்.

விவசாயம் என்றால் வழக்கமான நெல் பயிரிடுவது என்பதை மட்டும் செய்யாமல், மற்ற பணப் பயிர்களையும் இங்குள்ள மண் வளத்திற்கு ஏற்ப சாகுபடி செய்ய முன்வர வேண்டும். மீன் வளர்ப்புக்கேற்ற சூழல் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

கோழிகளுக்கு கழிச்சல் நோய் வராமல் தடுக்க, தற்போது தீவனத்துடன் மருந்தை அளிக்கும் புதிய தொழில்நுட்பம் அறிமுகமாகியுள்ளது. இதை தெரிந்துகொண்டு கோழி வளர்ப்பில் ஈடுபடலாம்.

கல்லூரி, பள்ளிகளில் இதுமாதிரி கருத்தரங்குகள் அடிக்கடி நடத்தப்படவேண்டும். ஒவ்வொரு கல்லூரியும் அருகில் இருக்கும் இரண்டு அல்லது மூன்று கிராமங்களை தத்தெடுத்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க வேண்டும் என்றார்.

தினமலர்

**விவசாயிகள் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:44 IST

காஞ்சிபுரம் : அத்திவாக்கம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், வேளாண்மைத் துறை சார்பில், எண்ணெய்வித்து பெருக்க திட்டத்தில், விவசாயிகளுக்கான இரண்டு நாட்கள் பயிற்சி முகாம் நடந்தது.காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் விஜயகுமார் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை இயக்குனர் குருராஜ் சிங் முன்னிலை வகித்தார்.வாலாஜாபாத் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகன், எண்ணெய்வித்து பெருக்கு திட்டத்தில், மணிலா சாகுபடி குறித்து விளக்கினார்.முகாமில், அத்திவாக்கம், மும்மல்பட்டு, சின்னையன் சத்திரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் கருப்புசாமி நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டைஇடுபொருட்கள் வழங்கும் முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:54 IST

பேரம்பாக்கம் : தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை மற்றும் இடுபொருட்கள் வழங்கும் முகாம் திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் நடந்து வருகிறது.திருவள்ளூர் மாவட்டத்தில் தோட்டக்கலை துறை சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் முகாம் நடந்து வருகிறது.திருவள்ளூர் ஒன்றியத்தில் கிளாம்பாக்கம், கோயம்பாக்கம், விளாம்பாக்கம், பூண்டி ஒன்றியத்தில் மொன்னவேடு, மேட்டுப்பாளையம், கடம்பத்தூர் ஒன்றியத்தில் புதுமாவிலங்கை, விடையூர், ஏகாட்டூர் ஆகிய பகுதிகளில் இந்த முகாம் மூலம் ஏராளமான விவசாயிகளுக்கு அடையாள அட்டையும், இடுபொருட்களும் வழங்கப்பட்டது.மேலும் கடம்பத்தூர் ஒன்றியத்தில் மப்பேடு, வெங்கத்தூர், வெள்ளேரிதாங்கல், அதிகத்தூர், முதுகூர், பண்ணூர், பேரம்பாக்கம் ஆகிய பகுதிகளிலும் முகாம்கள் நடத்தப்பட்டு தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளும், இடுபொருட்களும் வழங்கப்படும் என கடம்பத்தூர் வேளாண்மை உதவி அலுவலர் இளங்கோ தெரிவித்தார்.

**வேளாண் துறை பணிகள்: கலெக்டர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:49 IST

விழுப்புரம்:விழுப்புரம் பகுதியில் வேளாண்மைத் துறை சார்பில் நடந்த பணிகளை கலெக்டர் ஆய்வு செய்தார்.விழுப்புரத்தில் வேளாண்மை பொறியியல் துறை வழிகாட்டுதலில் நடந்த விவசாய பணிகளை கலெக்டர் பழனிசாமி ஆய்வு செய்தார். விக்கிரவாண்டி அருகே உள்ள பாப்பனப்பட்டு பகுதியில் ஆய்வு செய்த அவர், அங்கு புதிய நவாப்ரா திட்டத்தின் கீழ் சாத்தனூர் நீர் வடி முகடு பகுதியைச் சேர்ந்த 5 விவசாயிகளுக்கு தலா 2 ஆயிரம் மதிப்பிலான ஸ்பிரேயர்களும், விவசாயிகளுக்கு மரக்கன்றுகளும், மகளிர் சுய உதவிக்குழுவிற்கு 10 ஆயிரம் கடனுதவியும் வழங்கினார்.தொடர்ந்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டத்தின் கீழ் செண்டூரில் அமைக்கப்பட்டிருந்த பண்ணைக் குட்டை, தென்பசாரில் அமைக்கப்பட்டிருந்த கசிவு நீர் குட்டை பணிகளையும் கலெக்டர் ஆய்வு செய்தார்.வேளாண்மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், சிவகுரு, ஊராட்சித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, நீர்வடி முகடு தலைவர் நடராஜன், உதவி பொறியாளர்கள் சந்திரசேகரன், முரளிதரன், முருகன் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**தோட்டக்கலை திட்டப் பணிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:46 IST

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்ட தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டப் பணிகளை கலெக்டர் பழனிசாமி நேரில் ஆய்வு செய்தார்.
விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் திசுவாழை, மிளகாய் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. விராட்டிக்குப்பத்தில் விவசாயிகள் சிங்காரவேலன், அரிகிருஷ்ணன், ஆறுமுகம் பயிர் செய்துள்ள வாழை மற்றும் அய்யூர் அகரம் கிராமத்தில் தசரன் பயிர் செய்துள்ள மிளகாய் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் ஆகியவற்றை கலெக் டர் பழனிசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வேளாண் இணை இயக்குனர் ராமகிருஷ்ணன், தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர்செல்வம், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் வீராசாமி, ராசு, வேளாண் அலுவலர் கதிரேசன், உதவி அலுவலர்கள் ரமேஷ், பரமசிவம், சம்பத், தட்சிணாமூர்த்தி மற்றும் மாணிக்கவாசு உடனிருந்தனர்.

**மானிய விலையில் வேளாண் இடுபொருள் வழங்கும் முகாம் 15ல் துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:19 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரும் 15ம் தேதி வரை நடக்கும் வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கும் சிறப்பு முகாம்களில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெறலாம்' என, வேளாண் இனை இயக்குனர் ராஜன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து மானிய திட்ட வேளாண் இடுபொருட்களும் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் அவர்களுடைய கிராமத்துக்கு அருகிலேயே கிடைக்கும் வகையில் புதிய செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி தற்போது அனைத்து வட்டாரங்களிலும் விவசாய இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கும் முகாம்கள் வரும் 15ம் தேதி வரை நடத்தப்படுகிறது.
வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்களான தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், நீர் வள நிலவள திட்டம், ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டம், மக்காச்சோளம் அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம் ஆகிய திட்டங்களில் பயன்பெற பயனாளிகளை தேர்வு செய்து விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் பணியும் இந்த சிறப்பு முகாம்களில் நடக்கிறது.

விவசாயிகளுக்கு நடப்பு பருவத்துக்கு தற்போது தேவைப்படும் இடுபொருட்களான தரமான விதைகள், உயிர் உரங்கள் ஜிங்க் சல்பேட் நுண்ணூட்டம், ஜிப்சம், டி.ஏ.பி., உரங்கள், உயிரினக் கொல்லிகள் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு அவர்களுடைய கிராமத்திலேயே எளிதில் கிடைக்கும் வகையில் அனைத்து வட்டாரங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.
மாவட்டத்தில் கிராம அளவில் நடக்கும் வரும் இந்த முகாம்களில் விவசாயிகள் கலந்துகொண்டு, வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வாங்கி பயன்பெற கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இந்த வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கும் முகாம்கள் குறித்து முழுமையான தகவல்களை அறிய விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனர்களை விவசாயிகள் அனுகலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மழை பாதிப்பு நிவாரண உதவி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:17 IST

ஓசூர்: தேன்கனிக்கோட்டை அடுத்த பிலிகுண்டு கிராமத்தில் வீடு இடிந்து விழுந்து பலியானவர்கள் குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கப்பட்டது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் பலத்த மழை பெய்தது. இந்த கன மழைக்கு தேன்கனிக்கோட்டை அடுத்த பிலிகுண்டு கிராமத்தில் வீடு இடிந்து உஷாராணி(45), அவரது பேத்தி ரம்யா(7) ஆகியோர் பலியாகினர். தமிழக அரசு இவர்களது குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் நிதியும், இயற்கை இடர்பாடு நிதி ஒரு லட்சம் ரூபாயும் வழங்கியுள்ளது. உஷாராணி உறவினர்களிடம் இந்த நிதியை தாசில்தார் மல்லிகா வழங்கினார். துணை தாசில்தார்கள் நாகராஜன், ரவிச்சந்திரன், அஞ்செட்டி வருவாய் ஆய்வாளர் ஆழ்வார் மன்னன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:16 IST

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்க மண்டல செயற்குழு கூட்டம் கிருஷ்ணகிரியில் நடந்தது. மாநில துணை தலைவர் ராமகவுண்டர் தலைமை வகித்தார். மாவட்ட பொது செயலாளர் சுந்தரேசன், தலைவர் வண்ணப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் நாகராஜரெட்டி வரவேற்றார். மாநில தலைவர் டாக்டர் சிவசாமி கோரிக்கைகள் குறித்து பேசினார்.

விவசாயம் செய்ய ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் உற்பத்தி மானியம் வழங்க வேண்டும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் ஆறுகளுடன் இணைக்க வேண்டும் என்பது உள்பட பல தீர்மானங்களை நிறைவேற்றினர். மாவட்ட செயலாளர் கேசவரெட்டி, துணை தலைவர் கோணப்பன், துணை செயலாளர் மாரியப்பன், மத்திய மாவட்ட செயலாளர் சரவணன், கிழக்கு மாவட்ட செயலாளர் செந்தில்குமார், ஓய்வு பெற்ற டி.ஆர்.ஓ., முனியப்பன், துணை தலைவர்கள் தேவேந்திரன், தாசப்பா, லட்சுமணகவுடு, மகளிர் அணி செயலாளர் ஜெயலட்சுமி, பெருமா, மணிமேகலை, ஜோதிகண்ணன், கோழிப்பண்ணை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**பொங்கலுக்கு வரும் செங்கரும்பு விலை சென்ற ஆண்டை விட குறைந்தது சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:05 IST

மேலூர் : - மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் குறைந்த பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கரும்பின் விலை உயர்ந்துள்ளது. மதுரை மாவட்டத்தில் மேலூர் தாலுகாவில் தான் அதிகளவு பொங்கலுக்கான கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக தனியாமங்கலம், சருகுவலையபட்டி, கீழவளவு, நாவினிப்பட்டி, சுக்காம்பட்டி, சூரக்குண்டு, எட்டிமங்கலம் பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிர் செய்யப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு அதைவிட குறைந்த அளவிலேயே கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. இதற்கு கூலி ஆட்களின் பற்றாக்குறையும் ஒரு காரணம்.

மேலூரில் இருந்து டில்லி, மும்பை, குஜராத், ஆந்திரா, பெங்களூரு போன்ற வெளி மாநி லங்கள். நகரங்களுக்கும், தமிழகத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி, சிவகாசி, சாத்தூர் போன்ற பகுதிகளுக்கும் கரும்பு சப்ளை செய்யப்படுகிறது. 15 கரும்புகள் கொண்ட ஒரு கட்டின் விலை இந்த ஆண்டு ரூ. 130 முதல் 150 வரை வியாபாரிகளுக்கு அடக்கம் ஆகிறது. இதன் பிறகு லாரி வாடகை மற்றும் அவர்களது லாபம் சேர்த்து விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு ஒரு கட்டின் அடக்க விலை 90 ரூபாய் மட்டுமே இருந்தது.

லாரி டிரைவர் அய்யப்பன் : 500 கட்டுகளுடன் குஜராத் மாநிலம் ராஜ்கோட்டிற்கு செல்கிறேன். லாரி வாடகை 37 ஆயிரம் ரூபாய். கரும்பு அங்கு போய் சேருவதற்கு ஆறு நாட்கள் ஆகும்.
வியாபாரி போஸ் : விவசாயிகளிடம் கரும்பை விலைக்கு வாங்கி, அதை வெட்டி, ஏற்று கூலி, லாரி வாடகை கொடுக்கும் போது ஒரு கட்டிற்கு ரூ.220 வரை செலவாகிறது. கடந்த ஆண்டை விட இது அதிகம். அதனால் கரும்பின் விலையும் இந்த ஆண்டு மேலும் அதிகரிக்கும்.
கூலிதொழிலாளிகருப்பையா: 15 கரும்புகள் கொண்ட கட்டுகளாக தலா 20 கட்டுகளை வெட்டி, சுமந்து, லாரியில் ஏற்றினால் ரூ.250 கூலியாக கிடைக்கும். இது கடந்த ஆண்டை விட 50 ரூபாய்

அதிகம் தான்.இந்த விலை உயர்வால், பொங்கலுக்கு கரும்பை சுவைக்க விரும்பும் பொதுமக்கள் "கசப்பை' உணரத் துவங்கி உள்ளனர்.
இதனால் வீடுகளுக்கு கட்டு கட்டாக கரும்பு வாங்கியவர்கள், இனிமேல் ஓரிரு கரும்புகளை மட்டுமே வாங்கி சுவைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வெட்டும் பணி மும்முரம் : அழகர்கோவில் பகுதியில் உள்ள கள்ளந்திரி, அப்பன்திருப்பதி மற்றும் மேலூர் ஆகிய பகுதிகள் கள்ளந்திரி கால்வாய் மூலம் பாசன வசதி பெறுகின்றன. இங்குள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் கரும்பின் சுவை அதிகம் என்பதால், இப்பகுதியில் விளையும் கரும்புகளை வாங்க பயிரிடும்போதே வியாபாரிகள் முன்பணம் கொடுத்து விடுகின்றனர். பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒரு வாரம் மட்டுமே உள்ள நிலையில் கள்ளந்திரி பகுதியில் கரும்பு வெட்டும் பணி தீவிரம் அடைந்துள்ளது.

**இரண்டாம் போக நெல் அறுவடை பணி துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:53 IST

கோபிசெட்டிபாளையம்: தொடர் மழை காரணமாக அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதியில் இரண்டாம் போக நெல் அறுவடைப் பணி துவங்கியுள்ளது. கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளுக்காக பவானிசாகர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் கொடிவேரி அணையில் இருந்து இரு வாய்க்கால் மூலம் தண்ணீர் விடப்பட்டது. பல ஆண்டுகளுக்கு பிறகு நபார்டு திட்டத்தின் கீழ் வாய்க்கால் பராமரிப்பு பணிகளுக்காக ஃபிப்ரவரி 15ம் நிறுத்தப்படும் தண்ணீர், ஒரு மாதம் முன்பாக வரும் 15ம் தேதி நிறுத்தப்படும் என தெரிகிறது. இதனால் கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், விரைவாக விவசாய பணிகளை தொடங்க கேட்டுக்கொள்ளப்பட்டனர். விவசாயிகளும் இரண்டாம் போக சாகுபடி பணிகளை முன்கூட்டியே நடப்பாண்டு தொடங்கினர். வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் சின்னம் காரணமாக கோபி வட்டார பகுதியில் செப்டம்பர் 20 முதல் மழை வெளுத்து வாங்கியது. நம்பியூர், அளுக்குளி, கொளப்பலூர் பகுதியில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம், தடப்பள்ளி வாய்க்கால் மூலம் நெல் வயல்களில் புகுந்தது.

இதனால் நூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது. களை எடுத்தல், உரமிடுதல் உள்ளிட்ட விவசாய பணிகளும் செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்தனர். சென்ற டிசம்பரில் கோபி பகுதியில் மழை சற்று ஓய்ந்தது. இதனால் விவசாய பணிகள் மெல்ல மெல்ல தொடங்கியது. கீழ்பவானி பாசன பகுதிகளில் முதல் கட்டமாக நெல் அறுவடை பணிகள் ஆரம்பித்தது. அதை தொடர்ந்து கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில்

நெல் அறுவடை சூடுபிடித்துள்ளது. வாய்க்கால் சீரமைப்பு பணிக்களுக்காக வரும் 15ம் தேதி முதல் தண்ணீர் நிறுத்தப்பட வாய்ப்புண்டு என்பதால், நெல் அறுவடை பணிகளில் விவசாயிகள் வேகமாக ஈடுப்பட்டு வருகின்றனர். விவசாய கூலியாட்கள் மூலமாக நெல் அறுவடை பணிகளை விவசாயிகள் ஆர்வத்துடன் தொடங்கியுள்ளனர்.

**பொங்கலை முன்னிட்டு மாடு விற்பனை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:54 IST

ஈரோடு: பொங்கலை முன்னிட்டு ஈரோடு மாட்டுச் சந்தையில் மாடு விற்பனை களை கட்டியது. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை கூடுகிறது. ஆயிரத்துக்கும் குறைவான மாடுகளே விற்பனைக்கு வரும். ஈரோடு மற்றும் அதன் சுற்றவட்டாரப் பகுதியான சிவகிரி, மொடக்குறிச்சி, பொள்ளாச்சி, திருப்பூர், கோவை, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, ஜம்பை பகுதிகளில் இருந்து கறவை மற்றும் எருமை மாடுகளும் விற்பனைக்காக விவசாயிகளும், வியாபாரிகளும் கொண்டு வருகின்றனர்.
ஈரோடு மாட்டுச் சந்தை மேலாளர் முருகன் கூறியதாவது: ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் மாடுகளை நேற்று அதிகளவில் வாங்கிச் சென்றுள்ளனர். தை பொங்கலுக்கு ஒருவாரமே உள்ளதால் மாடுகளின் விற்பனை நன்றாக இருந்தது. 500 சிந்து மாடுகளும், 400 எருமை மாடுகளை விற்பனைக்காக வியாபாரிகள் ஈரோடு மார்க்கெட்டுக்கு கொண்டு வந்திருந்தனர். அவற்றில் சிந்து இன மாடுகள் 14 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகளில் 12 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது. இவ்வாறு அவர் கூறினார்.

**சத்துணவு திட்டத்தில் பாமாயிலுக்குபதிலாக தேங்காய் எண்ணெய்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:28 IST

பொள்ளாச்சி:"சத்துணவு திட்டத்தில் தற்போது வழங்கப்படும் பாமாயிலுக்கு பதிலாக, தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்படும்,' என்ற கவர்னரின் அறிவிப்பை விவசாயிகள் வரவேற்றுள்ளனர். இந்த திட்டத்தை விரிவுபடுத்தி மாநிலம் முழுவதும் ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெயை, மானிய விலையில் விற்க நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.சட்டசபையின் முதல் கூட்டத்தில் கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலா பேசும்போது, "தென்னை விவசாயிகள் நல வாரியம் மூலம் தேங்காயை கொள்முதல்செய்து கொப்பரை உற்பத்தி செய்யவும், அந்த வாரியம் உற்பத்தி செய்யும் தேங்காய் எண்ணெயை சத்துணவுத் திட்டத்தில் தற்போது வழங்கப்படும் பாமாயிலுக்கு பதிலாக பயன்படுத்தவும், கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யவும் அரசு நடவடிக்கைஎடுக்கும்,' என்று அறிவித்துள்ளார்.

கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள்அனைத்தும் விரையில் செயல்வடிவமாக்கப்படும்என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.தென்னை நல வாரிய துணைத்தலைவர் கிருஷ்ணசாமி: கவர்னர் உரையில், தென்னை நலவாரியம் மூலம் தேங்காய் கொள்முதல் செய்து, அதை எண்ணெயாக்கி சத்துணவு கூடங்களில் பாமாயிலுக்குபதிலாக பயன்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியானது. இது முதல் வெற்றியாகும். இந்த திட்டத்தை விரிவுபடுத்தி மாநிலம் முழுவதும் உள்ள ரேஷன்கடைகளில் தேங்காய் எண்ணெயை விற்பனை செய்ய வேண்டும், என்றார். கொப்பரை உற்பத்தியாளர் சங்க மாநில தலைவர்தங்கவேல்:வெளிநாட்டில் இருந்து பாமாயில் இறக்குமதி செய்வதை தவிர்க்க வேண்டும். சத்துணவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய்அனைத்து ரேஷன் கடைகளிலும் விற்பனைக்கு வரவேண்டும், என்றார்.தமிழ்நாடு தேங்காய் உற்பத்தியாளர் சங்க மாநிலபொதுச்செயலாளர் பட்டீஸ்வரன்: தேங்காய் எண்ணெய் உடலுக்கு நல்லது. தென்னை விவசாயம் நலிவடைந்து வரும் நிலையில், தென்னை நல வாரியம்மூலம் தேங்காய் கொள்முதல் செய்து, சத்துணவுக்கூடங்களில் பாமாயிலுக்கு பதிலாக தேங்காய் எண்ணெய் பயன்படுத்தும் அறிவிப்பு மகிழ்ச்சியாகஉள்ளது. அரசு கொடுக்கும் மானியம் நேரடியாக மக்களுக்கு கிடைக்கும் வகையில் ரேஷன் கடைகளிலும்தேங்காய் எண்ணெய் விற்பனை செய்ய வேண்டும்,என்றார்.

**தோட்டக்கலைத்துறையின் மானிய திட்டங்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:36 IST

உடுமலை:தோட்டக்கலைத்துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் பல்வேறு மானியத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.ஆண்டியகவுண்டனூர் பகுதியில் மிளகாய் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு துறை சார்பில் இடுபொருட்களை பாசன சபை தலைவர் பழனிச்சாமி வழங்கினார். தளி மற்றும் ஜல்லிபட்டி பகுதியில் மா-பழைய தோட்டம் புதுப்பிக்கவும், கோ-கோ, மா அடர் நடவு பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய இடுபொருட்களை பாசன சபை தலைவர் தெய்வசிகாமணி வழங்கினார்.

மா ஒட்டு செடி மற்றும் மருந்துகளை ஆலாம்பாளையம் விவசாயிகளுக்கு பாசன சபை தலைவர் காளிமுத்து கொடுத்தார். மானியம் பெற பதிவு செய்துள்ள விவசாயிகள் பொள்ளாச்சி ரோட்டிலுள்ள ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கி வரும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**வெற்றிலை ஆராய்ச்சி மையம் விவசாயி நலச்சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:46 IST

மோகனூர்: "பாலப்பட்டியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்' என, விவசாயிகள் நலச்சங்கம் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. விவசாயிகள் நலச்சங்கம்சார்பில், கோரிக்கையை வலியுறுத்தி, பொதுக்கூட்டம் மோகானூர் அடுத்த பாலப்படடியில் நடந்தது. மேற்கு ஒன்றியத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். செயலாளர் தர்மலிங்கம் வரவேற்றார். ஒன்றிய பொறுப்பாளர்கள் முருகேசன், சக்திவேல், சுந்தரராஜ், கணேசன், இளைஞரணி மாநிலத்தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்க மாநிலத்தலைவர் பாலசுப்ரமணியன், செயலாளர் சந்திரமோகன், கொள்கை பரப்பு செயலாளர் பூபாலன், செயற்குழு உறுப்பினர் சாமிநாதன், கரும்பு பயிரிடுவோர் சங்க மாநிலச் செயலாளர் ரமேஷ் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில், கொமாரபாளையம் வாய்க்கால் இடதுகரையை போக்குவரத்துக்கு ஏற்றவாறு அகலப்படுத்த வேண்டும். ராஜ, கொமாரபாளையம் மற்றும் மோகனூர் வாய்க்காலில் கழிவுநீர் கலப்பதை தடுக்க வேண்டும்.

கோரைக்கு கொள்முதல் நிலையம் அமைக்கவும், கோரைப்பயிரில் புதிய ரங்களை அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலப்பட்டியில் இந்தியன் வங்கி சார்பில், ஏடிஎம் மற்றும் எஸ்.வாழவந்தி, அரூர் ஆகிய பகுதிகளில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளை அமைக்க வேண்டும். பாலப்பட்டி பகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகைள் வலியுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியில், மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை விவசாயிகள் நலச்சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.

**மரக்கன்றுகள் நடும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:55 IST

திருவள்ளூர் : திருவள்ளூர் அடுத்த வேப்பம்பட்டு ஆர்.ஆர்.இந்தியா தொண்டு நிறுவனம் சார்பில் மரக் கன்றுகள் நடும் விழா நேற்று நடந்தது.கடம்பத்தூர் ஒன்றியம் அதிகத்தூர் நடுநிலைப் பள்ளியில் இருந்து இந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனம் வரை ஒன்றரை கி.மீ., தொலைவுக்கு சாலையின் ஓரத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. புங்கம், வேம்பு, புளிய மரங்கள் உள்ளிட்ட வகைகளைச் சேர்ந்த 150 மரக்கன்றுகள் நடப்பட்டன.ஆர்.ஆர்.இந்தியா அமைப்பின் நிறுவனர்

ராஜ்குமார் தலைமையில் தன்னார்வலர்கள் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ராஜலட்சுமி பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்கள், இப்பணிகளில் ஈடுபட்டனர். தொண்டு நிறுவனத்தின் பி.ஆர்.ஓ., ராகுல், திட்ட ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.

**தேனீ, காளான் வளர்ப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:07 IST

மதுரை : மதுரை ரூட்செட் பயிற்சி நிலையத்தில் ஜன., மூன்றாவது வாரத்தில் தேனீக்கள் வளர்ப்பு மற்றும் காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒருவார பயிற்சிக்கு, எட்டாவது வரை படித்த 18 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் பங்கேற்கலாம். உணவு இலவசம். கட்டணம் இல்லை. ஜன., 15க்குள், விவரங்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி : இயக்குனர், ரூட்செட் பயிற்சி நிலையம், விமான நிலைய சாலை, பெருங்குடி, மதுரை - 625 022. கூடுதல் தகவல்களுக்கு, 0452 - 269 0609, 90038 31002ல் தொடர்பு கொள்ளலாம்.

**இனிக்குது கரும்பு கசக்குது பொங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:51 IST

திருவள்ளூர் : பொங்கல் திருவிழாவையொட்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் கரும்பு வியாபாரம் கன ஜோராக நடக்கிறது. அதே நேரத்தில், மளிகைப் பொருட்களின் விலை உயர்வால், நுகர்வோர்களிடம் வாங்கும் சக்தி குறைந்துள்ளது.திருவள்ளூர் நகரில் பொங்கல் திருவிழாவையொட்டி பஜார் தெருவில் கரும்பு வியாபாரம் கன ஜோராக நடந்து வருகிறது. ஒரு கட்டு கரும்பின் விலை, 180 ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. ஒரு கட்டில் 20 கரும்புகள் உள்ளன. மேலும், குழந்தைகளுக்காக சிறுசிறு துண்டுகளாக கரும்பு வெட்டப்பட்டு ஒரு ரூபாய்க்கு ஒரு துண்டு எனவும் விற்கப்படுகிறது.இந்நிலையில், தற்போது, மளிகைப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், அதை வாங்கும் சக்கி நுகர்வோர்களிடம் குறைந்துள்ளது. ஜவுளி வியாபாரமும், "டல்' அடிப்பதால், கடைகளில் கூட்டம் குறைவாகவே உள்ளது.என்னதான் அரசு இலவசமாக பொங்கல் பை என பச்சரிசி, வெல்லம், ஏலக்காய், முந்திரி, திராட்சை என கொடுத்தாலும், மற்ற பொருட்களை, விற்கும் விலைவாசியில் வாங்க முடியாமல் மக்கள் தவிக்கின்றனர்.

**நெற்பயிர்களை தாக்கும் இலை கருகல் நோய்: தடுக்க வழிமுறைகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:35 IST

தேனி : நெற்பயிரில் குலைநோய் மற்றும் இலைகருகல் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் குலைநோய் மற்றும் பாக்டீரியல் இலை கருகல் நோய் தாக்குதல் அதிகம் உள்ளது. இரவு நேரத்தில் அதிக குளிரும், பகலில் சூரிய ஒளி குறைவாக இருப்பதால் இந்நோய் பரவுகிறது.

குலைநோய் தாக்கப்பட்ட பயிரில் கண் வடிவ புள்ளிகள் இலைகளில் முதலில் தோன்றும். நாளடைவில் இது பெரிதாகி இலைகள் கருகிவிடும். தாக்குதல் அதிகம் இருக்கும் போது இலை உறையில் இந்நோய் பரவி கதிர் வெளியே வராமல் செய்துவிடும்.மணிகள் உண்டாகும் பருவத்தில் தாக்குதல் ஏற்பட்டால் கதிர்மணிகள் பதராகிவிடும். குலைநோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 100 கிராம்கார்பன்டாசிம் அல்லது 200 மில்லி கினோசான் அல்லது 200 கிராம் ட்ரைசைக்லோசோல் மருந்தை கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.பாக்டீரியல் இலை கருகல் நோய் இலைகளின் ஓரத்தில் இருந்து பரவும். ஓரத்தில் மஞ்சளாகவும், நரம்பு பகுதியில் பச்சையாகவும் காணப்படும். நாளடைவில் மஞ்சள் நிறம் பரவி இலைகள் கருகிவிடும்.இதை தடுக்க ஏக்கருக்கு 120 கிராம் ஸ்ட்ரப்டோ மைசின் சல்பேட்மற்றும் டெட்ரோ சைக்ளினுடன் குளோரைடு 500 கிராம் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் என விவசாயத்துறை அறிவுறுத்தியுள்ளது.

**கால்நடை மலடுநீக்க முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:12 IST

முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் ஒன்றிய கால்நடைகளுக்கு மலடுநீக்க சிகிச்சை முகாம் மண்டல இயக்குனீர் டாக்டர் சந்திரன் தலைமையிலும், புழுதிக்குளம் ஊராட்சி தலைவர் சுப்பிரமணியன் முன்னிலையிலும் நடந்தது. டாக்டர் சுந்தரமூர்த்தி,ஆய்வாளர் முத்துச்சாமி, உதவி ஆய்வாளர் மலைச்சாமி, செந்தில்வேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

*முதுகுளத்தூர் அருகே மேலக்கொடுமலூரில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் சிவசுப்பிரமணியம் தலைமை வகித்தார். மருத்துவர் சுந்தரமூர்த்தி முன்னிலை வகித்தார். இதேபோல் முதுகுளத்தூர் அருகே செல்வநாயகபுரம், கீழக்கன்னிசேரியிலும் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடந்தன. முகாம்களில் ஊராட்சி தலைவர்கள் காந்திராஜ் (செல்வநாயகபுரம்) கணேசன் (விளங்குளத்தூர்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கண்மாய் மடை உடைந்து நெல் பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:12 IST

கீழக்கரை : திருப்புல்லாணி ஒன்றியம் வேளானூர் கண்மாய் மடை உடைந்ததால் , வயலுக்குள் நீர் புகுந்ததால் நெல் பயிர்கள் சாய்ந்தன. மேலமடை, படிப்பான், வேளானூர் மக்கள் விவசாயத்தை பிரதான தொழிலாக செய்கின்றனர். நேற்று முன்தினம் இரவு வேளானூர் கண்மாய் மடை உடைந்ததால், நீர் வெளியேறி வயல்களுக்குள் புகுந்ததில், நெல் பயிர்கள் சாய்ந்தன. அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**தென்னை விவசாய நலவாரிய அட்டை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:23 IST

திருப்புவனம் : தென்னை விவசாயிகள் நல வாரியத்தில் உறுப்பினராக சேர விண்ணப்பிக்கலாம். தோட்டக்கலை உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம் கூறியது: விவசாயிகள் குறைந்தது 50 மரங்கள் வைத்திருக்க வேண்டும். இதில் 100 மரங்கள் வரை 100 ரூபாய்; 500 மரங்கள் வரை -250; 1,000 வரை- 500; 1,001 க்கு மேல்- 1,000 ரூபாய் கட்டணம் செலுத்தினால், உறுப்பினர் அட்டை வழங்கப்படும். இதை மூன்று ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம்.
உற்பத்தி உயர்வு, புது தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், தேங்காய் கொள்முதலில் பங்கெடுக்கலாம். அடங்கல், பாஸ்போர்ட் அளவு போட்டோ- 2 , ரேஷன் கார்டு நகலுடன், தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும், என்றார்.

**பயிர் காப்பீடு செய்ய ஜன.15 கடைசி நாள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,00:23 IST

சிவகங்கை : பயிர் கடன் பெறாத விவசாயிகள் ஜன.,15 க்குள் காப்பீடு திட்டத்தில் சேரலாம்.விவசாய காப்பீடு திட்ட மண்டல மேலாளர் சி.அன்பரசு கூறியது:கடந்த ஆண்டு சம்பா நெற்பயிருக்கு 126 கோடி ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு ராபி பருவத்தில், பயிர் கடன் பெறாத விவசாயிகள், ஜன.,15 வரை, பதிவு செய்யலாம். கம்பு பயிர் ஏக்கருக்கு, சிறு, குறு விவசாயிகள் 263 ரூபாய்; பிற விவசாயிகள் 292 ரூபாய் பிரிமியம் கட்டவேண்டும். சோளத்திற்கு பயிர் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் 227; பிற விவசாயிகள் 253 ரூபாய்; ராகிக்கு, சிறு விவசாயிகள் 267; பிற விவசாயிகள் 297 ரூபாய்; மக்காச்சோளத்திற்கு சிறு விவசாயிகள் 1,473, பிற விவசாயிகள் 1,637 ரூபாய்; நிலக்கடலைக்கு சிறு விவசாயிகள் 544,

பிறர் 605 ரூபாய்; எள் பயிருக்கு சிறு விவசாயிகள் 162, பிறர் 180 ரூபாய்; சூரியகாந்திக்கு சிறு விவசாயிகள் 551, பிறர் 612 ரூபாய்; கொள்ளு பயிருக்கு சிறு விவசாயிகள் 121, பிறர் 134 ரூபாய்; பருத்திக்கு சிறு விவசாயிகள் 381, பிறர் 423 ரூபாய்; மிளகாய்க்கு சிறு விவசாயிகள் 1,242, பிறர் 1,380 ரூபாய்; வாழைக்கு சிறு விவசாயிகள் 13,554, பிறர் 15,060 ரூபாய்; மரவள்ளிக்கு சிறு விவசாயிகள் 3,280, பிறர் 3,645 ரூபாய்; வெங்காயத்திற்கு சிறு விவசாயிகள் 1,807, பிறர் 2,008 ரூபாய் செலுத்தவேண்டும். கடன் பெறாத விவசாயிகளின் விண்ணப்பத்தை வங்கிகள் நிராகரித்தால், கலெக்டரிடம் புகார் தெரிவிக்கலாம், என்றார்.

**நீலகிரியில் போலி விதைகள் அதிகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:18 IST

மஞ்சூர்:மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் மலை காய்கறி விவசாயத்தில் போலி விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதால் காரட் விவசாயத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. அதேவேளையில், எமரால்டு, கோத்தக்கண்டி மட்டம், பேலிதளா, போர்த்தி, இத்தலார், பெம்பட்டி, மீக்கேரி, மணிஹட்டி, பாலகொலா உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் பல ஏக்கரில் காரட், உருளைகிழங்கு, பீட்ருட், முள்ளங்கி, முட்டைகோஸ் உள்ளிட்ட மலை காய்கறி விவசாயம் பல ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேற்கண்ட பகுதிகளில் சில இடங்களில் உரம், விதை கடைகள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் தங்களது மலை காய்கறி தோட்டத்திற்கு தேவைப்படும் உரம் மற்றும் விதைகளை அப்பகுதிகளில் உள்ள கடைகளிலிருந்து பெற்று வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் அந்தந்த போகத்திற்கு தேவையான விவசாய பொருட்களை வாங்க வங்கியில் விவசாய கடன் பெற்று மலை காய்கறி விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.அதில் வரும் லாபத்தைதான் வங்கியில் பெற்ற கடனை அடைந்து வருகின்றனர்.

இந்நிலையில், இப்பகுதியில் கடந்த 3 மாதங்களுக்கு முன் விதைக்கப்பட்ட காரட் விவசாயத்தில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அறுவடையான காரட் அனைத்தும் "விரல்' அளவில் காணப்பட்டது.இந்த விதை குறித்து விவசாயிகள் சம்பந்தப்பட்ட துறையினரிடம் ஆய்வுக்கு எடுத்து சென்ற போது, போலி விதையால் தான் இந்த பாதிப்பு ஏற்பட்டது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.பல ஏக்கர் அளவில் பயிரிட்ட கேரட் விவசாயம் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பல லட்சம் ரூபாய் நஷ்டமடைந்தனர். எனவே,"சம்பந்தப்பட்ட துறையினர் போலி விதைகளை விற்பனை செய்வதை தடுப்பதுடன், சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என சிறு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**நெல் அறுவடை இயந்திரங்கள்வரவழைக்க விவசாயிகள் மனு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,03:09 IST

கடலூர்:நெல் அறுவடை இயந்திரங்களை வெளி மாவட்டங்களில் இருந்து கடலூர் மாவட்டத்திற்கு கேட்டுப் பெற வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.இதுகுறித்து கலெக்டர் சீத்தாராமனுக்கு, தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க மாவட்ட தலைவர் வீரபாண்டியன் அனுப்பியுள்ள மனு:கடலூர் மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையால், அறுவடைக்கு தயாராக இருந்த நெல் வயல்கள் சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் 100 சதவீதம் நெல் வயல்கள் பெல்ட் அறுவடை இயந்திரத்தால் தான் அறுவடை செய்ய முடியும்.எனவே, பெல்ட் அறுவை இயந்திரம் 40ம், சாதா டயர் அறுவடை இயந்திரம் 10ம் வெளிமாவட்டங்களில் இருந்து கேட்டு பெற தமிழக அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.இந்த இயந்திரங்களை வேளாண்மை உதவி செயற் பொறியாளர் மூலம் நியாயமான வாடகைக்கு நெல் அறுவடை செய்ய வேண்டும்.இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**விதை கிராம திட்ட பயிற்சி இடுபொருள் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:40 IST

துறையூர்: துறையூர் அருகே வேங்கடத்தானூரில் விவசாயிகளுக்கு விதை கிராம திட்ட பயிற்சி மற்றும் இடுபொருள் வழங்கும் விழா நடந்தது.

துறையூர் வேளாண் துறை உதவி இயக்குனர் ராஜசேகரன் வரவேற்றார். அசோகன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் துறை துணை இயக்குனர் (மாநில திட்டம்) சபா நடேசன், பயனாளிகளுக்கு இடுபொருள் வழங்கி பேசினார். திருச்சி விதைச் சான்று உதவி இயக்குனர் ஜெயராஜ், ""விவசாயிகள் விதை வாங்கும்போது சான்று அட்டை, அதில் குறித்துள்ள விதைத்தரம், காலாவதி, ஈரப்பதம் பார்த்து விதைகள் வாங்கி தரமான விதைஉற்பத்தி செய்ய வேண்டும்,"" என்றார். பட்டுவளர்ப்பு துறை உதவி ஆய்வாளர்கள் கண்ணன், மாரியப்பன், பட்டுவளர்ப்பு துறை மூலம் அரசு வழங்கும் மானிய உதவிகள் பற்றி கூறினர்.

உளுந்து பயிரில் உயிர் உரவிதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. தோட்டக்கலை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன், துனது துறை மூலம் செயல்படுத்தப்படும் அரசு நலத்திட்ட உதவி குறித்துப் பேசினார். விவசாயிகள் 50 பேருக்கு அடையாள அட்டைகள், 50 சதவீதம் மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்பட்டது. செங்காட்டுப்பட்டி, வேங்கடத்தானூர் கோம்பை, மருவத்தூர், செல்லிப்பாளையம் கிராம விவசாயிகள் 100 பேர் பங்கேற்று பயனடைந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் கண்ணன், செல்வக்குமார், சம்பத், தர்மலிங்கம் செய்திருந்தனர்.

**தோட்டக்கலை இடுபொருள் முனைப்பு இயக்க முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2011,01:09 IST

கரூர்: தாந்தோணி வட்டார தோட்டக்கலைத் துறை சார்பில் செல்லாண்டிபாளையம் கிராமத்தில் தோட்டக்கலை இடுபொருள் விநியோக முனைப்பு இயக்க முகாம் நடந்தது.
தாந்தோணி வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் பல்வேறு மத்திய, மாநிலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்டங்களினால் பயனடையும் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, பயனாளி அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. பயனாளி அடையாள அட்டை பெற்ற விவசாயிகளுக் கு தாந்தோணி வட்டார வேளா ண் விரிவாக்க மையம், அருகிலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பல்÷ வறு தோட்டக்கலை இடுபொரு ட்கள் மானிய விலையில் விநி÷ யாகம் செய்யப்பட்டு வருகிறது.
தாந்தோணி வட்டாரத்தில் தே õட்டக்கலை இடுபொருட்கள் வி நியோக முனைப்பு இயக்க மு காம்கள், ஜனவரி 21 முதல் 13 ம் தேதி வரை நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, தாந்தோ ணி வட்டாரம், செல்லாண்டிபாளையம் கிராமத்தில் தோட்டக்கலை இடுபொருட்கள் விநியோக மு னைப்பு இயக்க முகாம் ஜனவரி நான்காம் தேதி நடத்தப்பட்டது.
முகாமை தாந்தோணி வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் சொர்ணமாணிக்கம் துவக்கி வைத்தார். தோட்டக்கலைத் துØ ற மூலம் செயல்படுத்தப்படும் பல்÷வுறு மத்திய, மாநிலத் திட்டப் பணிகள் குறித்து தாந்தோணி வட்டாரத் தோட்டக்கலை அலுவலர் நடராஜன் விளக்கினார். பஞ்சாயத்துத் தலைவர் கோ விந்தராஜ் முன்னிலை வகித்து, விவசாயிகளுக்கு பயனாளி அடையாள அட்Ø ட வழங்கினார். துணை தோட்டக்கலை அலுவலர் ஜானகி, நுண்ணீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

**கரூரில் கால்நடை, மீன்வள வார விழா : விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:25 IST

கரூர்: கரூர் மாவட்ட கால்நடை பல்கலை பயற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், கால்நடை மற்றும் மீன்வள வார விழா நடக்கவுள்ளது. இதையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மையத்தின் தலைவர் செந்தில்வேல் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் கால்நடை மற்றும் மீன்வள வார விழா ஜனவரி மாதத்தில் கடைபிடிக்க ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி, கரூர் மாவட்ட கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கால்நடை பராமரிப்புத் துறை, ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவை சார்பில் நடக்கவுள்ளது.

இதையொட்டி ஜனவரி 11ம் தேதி ஆத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், "கலப்பின கன்றுகள் பேரணி மற்றும் கறவை மாடுகளில் பால் உற்பத்தியை மேம்படுத்துதல்' தலைப்பில் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நடக்கிறது. ஜனவரி 12ம் தேதி மைய வளாகத்தில் பொங்கல் விழா, கால்நடை வளர்ப்பு பற்றி சிறப்பு சொற்பொழிவு, 18ம் கூனம்பட்டி கிராமத்தில், "செம்மறியாடு வளர்ப்பில் அறிவியல் தொழில்நுட்பங்கள்' தலைப்பில் கிராமியப் பயிற்டச, 19ம் தேதி ஓனவாய்க்கால் மேட்டில் குடற்புழு நீக்கம் மற்றும் வெள்ளைக்கழிச்சல் தடுப்பூசி சிகிச்சை முகாம்.

ஜனவரி 20ம் தேதி அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் இயற்கை வள வேளாண்மை குறித்த வளாகப் பயிற்சி, 21ம் தேதி வெறிநாய் தடுப்பு பற்றி விழிப்புணர்வு முகாம் மண்மங்கலம் அரசு பள்ளியிலும், 22ம் தேதி அய்யம்பாளையம் கிராமத்தில் கால்நடை சிகிச்சை முகாம் நடக்கிறது. ஜனவரி 24ம் தேதி புளியம்பட்டி கிராமத்தில், காங்கேயம் மாடுகளை பாதுகாத்தல் குறித்த சிறப்பு விளக்க முகாம், சிறந்த காங்கேய மாடுகளுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சி நடக்கிறது. எனவே, கால்நடை மீன்வளர்ப்புத் தொழிலை ஈடுபட்டுள்ள பண்ணையாளர்கள் மையத்தின் மூலம் நடக்கவுள்ள கால்நடை மற்றும் மீன்வள வார விழாவில் பங்கேற்று பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு பண்டுதகாரன்புதூரில் செயல்படும் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தினை நேரிலோ அல்லது 04324-294335 என்ற தொலைப்பேசி எண்ணிலோ தொடர்புகொள்ளலாம்.

**விவசாயிகள்குறைகேட்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,01:56 IST

கடலூர்:கடலூர் மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தலின் பேரில் விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் வரும் 14ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்கிறது.விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

**பிற பயிர்களுக்கு காப்பீட்டு திட்டம்வரும் 15ம் தேதி கடைசி நாள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,01:45 IST

கடலூர்:தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பிற பயிர்களை வரும் 15ம் தேதிக்குள் காப்பீடு செய்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்ட மண்டல மேலாளர் அன்பரசு விடுத்துள்ள செய்திக்குறிப்பு:நெல் பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு கடந்த 2009ம் ஆண்டு 126 கோடி ரூபாய் இழப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேப்போன்று பிற பயிர்களுக்கும் காப்பீடு திட்டம் உள்ளது.இத்திட்டத்தின் படி இந்த ஆண்டு "ராபி' பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர் கடன் பெறாத விவசாயிகள் வரும் 15ம் தேதிக்குள் காப்பீடு செய்துக் கொள்ளலாம்.

பயிர் வாரியாக பயிர் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் 55 சதவீதம் மானியம் போகவும், பிற விவசாயிகள் 50 சதவீதம் மானியம் போக ஒரு ஏக்கருக்கு செலுத்த வேண்டிய காப்பீட்டு தொகை விவரம்:கம்பு 263 / 292 ரூபாய், சோளம் 227/ 253 ரூபாய், கேழ்வரகு 267/297 ரூபாய், மக்காச்சோளம் 1473/1637 ரூபாய், வேர்க்கடலை 544/605 ரூபாய், எள் 162/180 ரூபாய், சூரியகாந்தி 551/612 ரூபாய், கொள்ளு 121/134 ரூபாய், பருத்தி 381/423 ரூபாய், மிளகாய் 1242/1380 ரூபாய், வாழை 13,554/ 15,060 ரூபாய், மரவள்ளி (குச்சி) 3280/3645 ரூபாய், வெங்காயம் 1807/2008 ரூபாய்.மேற்கண்ட பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் கடன் வாங்கும் விவசாயிகளுக்குஅவர்கள் கடன் வாங்கும் வங்கியிலேயே கட்டாயமாக பயிர் காப்பீடு செய்யப்படும்.பயிர் கடன் வாங்காத பிற விவசாயிகள் தாங்கள் விரும்பும் வங்கிகளில் பயிர் காப்பீடு செய்யலாம்.கடன் பெறா விவசாயிகள் விண்ணப்பம் வங்கிகளில் நிராகரிக்கப்பட்டால் உடன் கலெக்டர் அல்லது மாவட்ட அளவிலான பயிர் காப்பீட்டு கண்காணிப்புக்குழு அல்லது வேளாண் இணை இயக்குனரிடம் புகார் செய்யலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**உழவர் சந்தையில் வாடிக்கையாளர்கள் வருகை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:34 IST

தர்மபுரி: தர்மபுரியில் வெளி மார்க்கெட்டில் காய்கறிகள் விலை அதிகரித்து இருப்பதால், கடந்த சில மாதங்களாக உழவர் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், காய்கறி சாகுபடியும் குறிப்பிட்டு செல்லும்படியாக நடந்து வருகிறது. மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் தக்காளி, கத்தரி, வெண்டை, அவரை, மூட்டை கோஸ், காலிஃப்ளவர் உள்ளிட்ட

காய்கறிகள் உள்ளூர் சந்தைகளில் விற்பனை போக திருவண்ணாமலை, வேலூர், பெங்களூரு, சென்னை, தென் மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு செல்கிறது. கடந்த நவம்பர் மாதம் பெய்த தொடர் மழை காரணமாக காய்கறிகளின் உற்பத்தி குறைந்தது. இதனால், உள்ளூர் சந்தைக்கு வரும் காய்கறிகள் வரவு குறைந்து விலை பல மடங்காக உயர்ந்தது. குறிப்பாக கத்தரி, வெண்டை, அவரை, புடலை, பீர்க்கன் உள்ளிட்டவைகள் கூட கிலோ 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்பனையானது.

கடந்த ஒரு மாதமாக தக்காளி மற்றும் வெங்காயத்தின் விலை கிலோ 60 ரூபாய் வரையில் உள்ளூர் சந்தையில் விலை ஏறியது. இதனால், நடுத்தர மக்கள் காய்கறி பயன்பாட்டை குறைத்தனர். தற்போது, மழை குறைந்து காய்கறிகளின் உற்பத்தி பழைய நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் விலையும் சற்று குறைந்த போதும், ஏற்கனவே ஏறிய விலையை நிர்ணயம் செய்து பல வியாபாரிகள் வெளி மார்க்கெட்டில் தொடர்ந்து காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். இதனால், தர்மபுரி உழவர் சந்தையில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களை விட 20 சதவீதம் அதிகரித்துள்ளது. காலை நேரத்தில் பனி காற்றின் தாக்கம் அதிகம் இருப்பதால், காலை 6 மணியில் இருந்து 8.30 மணி வரையில் வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகம் உள்ளது.

உழவர் சந்தையில் வெளி மார்க்கெட்டை விட விலை குறைவாக இருப்பதால், பெரும்பாலான மக்கள் உழவர் சந்தையில் கொள்முதல் செய்ய துவங்கியுள்ளனர். கடந்த வாரம் வரையில் விலை அதிகரித்து இருந்த தக்காளி நேற்று கிலோ 20 ரூபாய்க்கும், வெண்டை 12 ரூபாய்க்கும், கத்தரி 8 ரூபாய்க்கும், கேரட், பீன்ஸ் 30 ரூபாய்க்கும், முள்ளங்கி 8 ரூபாய்க்கும், வாழைக்காய் 4 ரூபாய்க்கும் விற்பனை நடந்தது. வெளி மார்க்கெட்டை விட கிலோவுக்கு 4 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் விலை குறைவாக இருப்பதால், வாடிக்கையாளர்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகம் இருந்தது. கடந்த காலங்களில் விலை குறைவாக இருந்த தேங்காய் விலை யாரும் எதிர்பார்க்காத விலைக்கு சென்றது. ஒரு தேங்காய் 8 ரூபாய் முதல் 10 ரூபாய் வரைக்கு விற்பனை நடந்தது. கடந்த காலங்களில் சிறிய ரக மூன்று காய்கள் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது மூன்று காய்கள் 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது."வரும் பொங்கல் வரையில் தேங்காய் உள்ளிட்ட காய்கறிகளில் விலை ஏற்ற, இறக்கத்தில் இருக்க வாய்ப்புள்ளதாகவும், தேங்காய் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் புதிய காய்கள் அறுவடைக்கு கிடைக்கும் போது மட்டுமே விலை குறைய வாய்ப்பு இருப்பதாக' விவசாயிகள் தெரிவித்தனர்.

**வேலை உறுதி திட்டத்தில் வேளாண் துறை இணைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:01 IST

திருப்பூர்:""நடவு மற்றும் அறுவடை சமயங்களில் விவசாய தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதால், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை வேளாண் துறையுடன் இணைக்க வேண்டும்," என கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க தலைவர் பழனிசாமி தெரிவித்தார்.திருப்பூரில் நிருபர்களிடம் கூறியதாவது:நாடு முழுவதும் பரவலாக பெய்த மழையால் வெங்காய சாகுபடி இந்தியா முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது; அதனால் விலை உயர்ந்துள்ளது. விளைந்த வெங்காயத்தை குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் இருப்பு வைக்கவும் முடியாது.ஒரு கிலோ வெங்காய விதை 350 ரூபாய்க்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது, விவசாயிகளுக்கு வழங்காமல், ஒரு நிறுவனத்துக்கு 500 கிலோ விதை 1.75 லட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. அந்நிறுவனம், கிலோ 1,200 ரூபாய்க்கு விற்கிறது. தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தால், விவசாய தொழிலாளர்கள் வெளியேறி விட்டனர்.

இதனால், நடவு மற்றும் அறுவடை சமயங்களில் தொழிலாளர் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, வேளாண் துறையுடன் திட்டத்தை இணைத்து, நடவு மற்றும் அறுவடை நேரங்களில் திட்ட பணியாளர்கள் மூலமாக விவசாய பணியை மேற்கொள்ள வேண்டும். அதற்கான பங்களிப்பு தொகையை கொடுக்கவும் விவசாயிகள் தயாராக உள்ளனர்.சொட்டு நீர்பாசன திட்டத்தில் 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், 10 சதவீதம் கூட விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. அதிகாரிகளும், தளவாட தயாரிப்பு நிறுவனங்களுமே அதிகம் பயனடைகின்றனர். இரண்டு லட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அதிகப்படியான கெடுபிடியால், 2,000 மின் இணைப்பு கூட வழங்க முடியாது. அறிவிக்காமல் இருந்தாலும், பதிவு மூப்பு அடிப்படையில் இணைப்பு கிடைத்திருக்கும். மின்வாரிய கெடுபிடியால், விவசாயிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அறிவித்தபடி, எளிய வகையில் இணைப்பு வழங்க வேண்டும். இத்தகைய கோரிக்கைகளை வலியுறுத்தி, விவசாய சங்கங்கள் சார்பில், பிப்., 6ல் கோவையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும், என்றார்.

**வேளாண் இயந்திரம் இயக்க பயிற்சி : விவசாய தொழிலாளர் நல வாரிய தலைவர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:39 IST

கிருஷ்ணகிரி: ""விவசாய தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்களை இயக்குவதற்கு பயிற்சி அளிக்கப்படும்," என விவசாய தொழிலாளர் நல வாரிய தலைவர் செல்லமுத்து தெரிவித்தார்.தமிழ்நாடு விவசாய

தொழிலாளர்கள் விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. தமிழக விவசாய தொழிலாளர் நல வாரிய தலைவர் செல்லமுத்து தலைமை வகித்தார். கலெக்டர் அருண்ராய் முன்னிலை வகித்தார்.

விழாவில் வாரிய தலைவர் செல்லமுத்து பேசியது: தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் விவசாயிகள் சமூக பாதுகாப்பு திட்டம் 2006ம் ஆண்டு துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 76 லட்சத்து 27 ஆயிரத்து 777 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, ஒரு கோடியே 74 லட்சத்து 7 ஆயிரத்து 332 பேர் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். உறுப்பினர்களில் 8,29,180 பயனாளிகளுக்கு 654 கோடியே 95 லட்ச ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2,46,481 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு 6,26,556 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 10,586 பேருக்கு 14 கோடியே 34 லட்ச ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தில் முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கு உதவித்தொகை 400 ரூபாயில் இருந்து 500 ரூபாயாக கடந்த மாதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி தமிழகத்தில் 1,13,599 பேரும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2,275 பேரும் பயன் அடைகிறார்கள்.விவசாய தொழில்கள் செய்ய ஆட்கள் இல்லாததால் பல்வேறு இயந்திரங்களை நம்பி விவசாயம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேளாண்மை பொறியியல் துறையுடன் இணைந்து வேளாண் கருவிகளை இயக்குவதற்கான பயிற்ச்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான அரசு ஆணை வரப்பெற்றதும் விரைவில் பயிற்சி துவக்கப்படும். மாவட்ட நிர்வாகம் மூலம் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு 18 வயது நிரம்பிய மற்றும் விடுபட்ட வேளாண் பெருமக்களை விவசாய தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுமான தொழில் புரியும் அனைவரும் நலவாரியங்களில் உறுப்பினர்களாக சேர்ந்து அரசின் நலத்திட்ட உதவிகளை பெற்று பயன் அடையலாம். இவ்வாறு அவர் பேசினார்.விவசாய தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரண உதவித்தொகை, இயற்க்கை மரண நிவாரண உதவித்தொகை, திருமண உதவித்தொகை, விவசாய தொழிலாளர் ஓய்வூதியம், முதியோர் உதவித்தொகை என மொத்தம் 79 பேருக்கு 8 லட்ச ரூபாய் மதிப்பிலான உதவித்தொகைகளை நலவாரிய தலைவர் வழங்கினார். வாரிய இணை தலைவர் ராஜன், டி.ஆர்.ஓ., பிரகாசம், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ரமேஷ், ஆர்.டி.ஓ., நூர் முகமது மற்றும் அனைத்து தாசில்தார்கள் கலந்து கொண்டனர்.

**இயற்கை விவசாயத்துக்கு எதிராககுவியும் பிளாஸ்டிக் கழிவுகளால் சிக்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:11 IST

பந்தலூர்:இயற்கை விவசாயத்திற்கு எதிராக தோட்டங்களில் குவியும் பிளாஸ்டிக் கழிவுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.நீலகிரி மாவட்டம் பந்தலூர் அடுத்துள்ள கையுன்னி பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான விவசாயிகள் முழுமையாக இயற்கை விவசாயத்திற்கு தங்களை மாற்றிக்கொண்டுள்ளனர். தேயிலை, காபி,காய்கறிகள் என அனைத்து விவசாயத்திலும் இயற்கை உரம் மற்றும் மருந்துகளையே பயன்படுத்துவதன் மூலம் அதிகளவு விளைச்சலும், தரமான உற்பத்தியும் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.ஆனால், இயற்கை விவசாயத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் கையுன்னி டாஸ்மாக் மற்றும் இப்பகுதி கடைகளிலிருந்து கால்வாயில் கொட்டப்படும் பிளாஸ்டிக் கழிவுகளால் தோட்டங்களில் பிளாஸ்டிக் நிறைந்து காணப்படுகிறது. இதனால் உரமிடமுடியாமலும், களைகளை அகற்ற முடியாமலும் விவசாயிகள் திண்டாடிவருகின்றனர். மேலும் டாஸ்மாக் கடையிலிருந்து கண்ணாடி பாட்டில்களும் அவ்வப்போது கொட்டப்படுவதால் உடைந்த பாட்டில்களும் விவசாயிகளை அவ்வப்போது பதம் பார்க்கிறது.

இதனருகே தனியார் மற்றும் ஊராட்சி குடிநீர் கிணறு அமைந்துள்ளது. பிளாஸ்டிக் மற்றும் பாட்டில் துண்டுகள் கிணற்று நீரில் கலந்து அசுத்தம் ஏற்படுத்துகிறது.இது குறித்து இப்பகுதியினர் சார்பில் ஜோன் என்பவர் அனைத்து துறை அதிகாரிகளுக்கும் மனு கொடுத்த நிலையில், காவல்துறையினர் இவரை மிரட்டி வருவதாகவும், விவசாய நிலம் பாதிக்கப்படுவது குறித்து புகார் கொடுத்தால் எந்த அதிகாரிகளும் கண்டுக்கொள்ளவில்லை எனவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, இயற்கை விவசாயத்தை காக்க, ஊராட்சி மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; இதனையும் மீறி செயல்படுபவர்கள் மீது நடவடிக்கையும் அவசியமாகும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

**விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யணும்: வேளாண் காப்பீடு நிறுவனம் அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:26 IST

கரூர்: மத்திய அரசு நிறுவமான இந்திய வேளாண் காப்பீடு நிறுவன சென்னை மண்டல மேலாளர் அன்பரசு வெளியிட்ட அறிக்கை:தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விவசாயிகளுக்கு அழை ப்பு விடுவிக்கப்படுகிறது. நெல் பயிருக்கு மட்டுமின்றி மற்ற

பயிர்களுக்கும் பயிர் காப்பீடு உண்டு. 2009ம் ஆண்டு சம்பா நெற்பயிருக்கு 126 கோடி ரூபாய் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டம் ராபி 2010-11ல் கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, கொள்ளு, பருத்தி, மிளகாய், வாழை, மரவள்ளி (குச்சிக்கிழங்கு), வெங்காயம் அனைத்தும் பயிர்களுக்கும் கடன்பெறா விவசாயிகள் இதில் சேருவதுக்கு, ஜனவரி 15ம் தேதி கடைசி நாளாகும்.

காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய்ய பயிர் கடன் வழங்கும் விவசாயிகள், தாங்கள் கடன் வாங்கும் வங்கிலேயே கட்டாயமாக பயிர்க்காப்பீடு செய்யப்படுவர். பயிர்கடன் வாங்காத மற்ற விவசாயிகள் வங்கிகளில் தங்கள் விருப்பத்தின் பேரில் பயிர்க்காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர்களை காப்பீடு செய்ய அருகில் உள்ள வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு இருக்க வேண்டும். வங்கி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் விவசாயத் துறையிடம் கிடைக்கும் ஏஜசியின் கடன்பெறா விவசாயிகள் சேரும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

தங்களின் நிலம் மற்றும் பயிரிடும் பயிரக்கான விபரங்களை வங்கியில் தெரிவிக்க வேண்டும்.வங்கி சேமிப்பு கணக்கு மூலம் காப்பீடு கட்டணத்தொகை செலுத்த வேண்டும். பயிர்களுக்கு மகசூல் அடிப்படையிலான இழப்பீடு ஏதும் இருந்தால் திட்ட விதிகளுக்கு உட்பட்ட உங்களுக்கான இழப்பீட்டுத்தொகை உங்கள் வங்கி கணக்கில் ஏஜசி மூலமாக வரவு வைக்கப்படும்.

**மலர் சாகுபடி தொழிலில் மென்மேலும் பிரச்னை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:04 IST

குன்னூர்:நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி தொழிலில் ஏற்பட்டு வரும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் அரசு மெத்தனம் காட்டுவதால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்; "மலர் சாகுபடி, மண் வளத்தை பாதிக்கும்', என ஆய்வுகள் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.நீலகிரியில், 10 ஆண்டுக்கு முன் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சியை தொடர்ந்து, "லாபம் கொழிக்கும் தொழில்' என்ற அறிவிப்புடன் மலர் சாகுபடியை மாற்றுத் தொழிலாக பிரபலப்படுத்தியது தோட்டக் கலை துறை; அரசு ஒப்புதலுடன் மானியம் வழங்கியதால் மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் தோட்டத்தின் ஒரு பகுதியை பசுமைக் குடிலாக மாற்றி, கார்னேஷன், லில்லியம், ஜெர்பரா மலர்களை சாகுபடி செய்தனர்.

"ஒரு கார்னேஷன் செடியில், ஒன்றரை ஆண்டில் மூன்று சாகுபடி பெற முடியும்; ஒரு செடியில் 20 மலர்களை பெற முடியும்' என்ற தோட்டக் கலை துறையினரின் கணக்கு துவக்கத்தில் சரியாக இருப்பினும், நாளடைவில் சொதப்பியது. "தற்போது, ஒரு செடியில் 6, 7 மலர்கள் மட்டுமே கிடைக்கின்றன; மூன்றாண்டு வரை சாகுபடி அளிக்க வேண்டிய நாற்றுகள், ஓராண்டில் அழுகி விடுகின்றன. வெளிநாடுகளில் இருந்து மலர் நாற்றுகளை வாங்கி, வினியோகிக்கும் ஏஜன்டுகள், தரமற்ற நாற்றுகளை வழங்கி ஏமாற்றிவிட்டனர்,' என விவசாயிகள் புலம்புகின்றனர்.தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தால், விவசாயிகள் வாங்கிய சுமார் 60 கோடி ரூபாய் வங்கி கடன் நிலுவையில் உள்ள நிலையில், புதிதாக வந்த ஓர் ஆய்வறிக்கை பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தி உள்ளது.ஆய்வறிக்கை ஏற்படுத்திய அதிர்ச்சி: இந்திய மலர் சாகுபடி குறித்து, பூனா விவசாய கல்லூரியின், "ஹைடெக் மலர் சாகுபடி திட்ட' வல்லுனர் குழு டாக்டர்கள். பாடீல், ஜக்தாப், ரான்பைஸ், பட்ஜ்வார் ஆகியோர் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய தகவல்கள்;மலர் சாகுபடிக்கு இந்தியாவின் இயற்கை வளம் ஏற்றதாக இருப்பினும், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, மலர் உற்பத்தி, ஏற்றுமதி மிகக் குறைவாக உள்ளது.

இறக்குமதி செய்யப்படும் கொய்மலர் நாற்றுகளுக்கு, பெரும் தொகையை "ராயல்டி'யாக செலுத்த வேண்டியுள்ளது; அந்நாற்றுகள் மூலம் மலர் உற்பத்தி செய்து மீண்டும் வெளிநாட்டினருக்கே விற்று, அவர்களுக்கு இரட்டை லாபம் ஏற்படுத்தி கொடுத்து கொண்டிருக்கிறோம்.மலர் சாகுபடிக்கு, ரசாயன கலப்பு அதிகமுள்ள பூச்சி கொல்லி, பூஞ்சான மருந்து, உரங்களை பயன்படுத்த வேண்டியுள்ளதால், மண்ணின் தன்மை பாதிக்கிறது; சுற்றுச்சூழல் மாசுபடுகிறது; செடி, கொடி, வன விலங்குகளுக்கு பாதிக்கின்றன; பசுமைக் குடிலில் பணிபுரியும் வேலையாட்களுக்கு ஆஸ்துமா, நுரையீரல், புற்று நோய் ஏற்படும் வாய்ப்புள்ளது.மத்திய அரசு, கடந்தாண்டு(2010) மலர் சாகுபடிக்கான வருமான இலக்கு 1000 கோடி என இலக்கு நிர்ணயித்தது; கடந்த 2006-07ல், 649.6 கோடி, 2007-08 ல் 332 கோடி ரூபாய் மட்டுமே வருமானம் ஈட்டப்பட்டுள்ளது; வரும் ஆண்டில இது மேலும் குறையும். சிறு மலர் சாகுபடியாளர்களை பொருத்தவரை, கோடிக்கணக்கில் கடன் வாங்கி இத்தொழிலில் அவர்கள் ஈடுபட்டிருப்பினும், ஒரு சிலரே பயன் பெற்றுள்ளதால், இது நலிவடைந்த தொழிலாகவே கருதப்படுகிறது.இவ்வாறு, அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.நீலகிரி மாவட்ட சிறு மலர் சாகுபடியாளர்கள் சங்க தலைவர் விசுவநாதன் கூறுகையில், ""மலர் சாகுபடியில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தால் சிறு விவசாயிகள் பெரிதும் பாதித்துள்ளனர்; தொழிலின் நிலை குறித்து ஆய்வு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.நீலகிரி எக்ஸ்னோரா அமைப்பின் தலைவர் கண்ணன் கூறுகையில்,""நீலகிரியில் தற்போது மலர் சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் ரசாயான உரங்களால் மண்ணின் தன்மை பாதிக்கிறது என்ற தகவல் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது; இத்தொழிலின் நிலை குறித்து விரிவாக ஆய்வு நடத்த வேண்டும்," என்றார்.

**கடுகூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க முதல்வருக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:22 IST

அரியலூர்: க.பொய்யூர் கிராம அமைதிப்புறா இளைஞர் நற்பணி மன்ற தலைவர் ராஜேந்திரன் மற்றும் கடுகூர், பொய்யூர் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பலரும் தமிழக முதல்வருக்கு அனுப்பிய கோரிக்கை மனு: அரியலூர் தாலுகா கடுகூர் கிராமத்தில், கால்நடை கிளை மருந்தகம் அமைக்க வேண்டும் என, கடந்த 15 ஆண்டாக இப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஏழு குக்கிராமங்களை கொண்ட பெரிய பஞ்சாயத்து கடுகூர்.இங்கு 5,000 மக்கள் வசிக்கின்றனர்.

இது மட்டுல்லாது கடுகூரை மையமாக கொண்டு, அயன் ஆத்தூர், பூமுடையான்பட்டி, தலையாரி குடிக்காடு,க.பொய்யூர், கோப்பளியங்குடிக்காடு, நுறையூர், பெரிய மணக்குடி, சின்ன மணக்குடி, கல்லங்குறிச்சி, சீனிவாசபுரம், மோரக்குழி, சாளையக்குறிச்சி, கல்லமேடு, மேட்டுபாளையம், சென்னிவனம், சின்ன ஆனந்தவாடி, பெரிய ஆனந்தவாடி, கிளிமங்கலம், சின்ன கிளிமங்கலம், காவனூர், அம்பாபூர் உள்ளிட்ட 23 கிராமங்கள் உள்ளன.

மேற்கண்ட கிராமங்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. இந்த கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் 12 கி.மீ., தூரம் கொண்டு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதுபோல அழைத்து செல்லும் போது நோய்வாய்ப்பட்ட சில கால்நடைகள் இறந்து விடும் அபாயம் ஏற்படுகிறது. இதனால் பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கால்நடைகளை இழக்கும் குடும்பங்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகின்றன. எனவே கடுகூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக முதல்வரை கேட்டு கொள்கிறோம்.

**நெல் கொள்முதல் நிலைய மோசடி, முறைகேடு : லஞ்ச ஒழிப்பு போலீஸாரை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டுகோள**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,03:51 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் வீரசண்முகமணியிடம் அளித்துள்ள மனுவின் விபரம்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண் இயக்குனர்கள், ஒவ்வொரு கொள்முதல் பருவத்திலும் அந்தந்த மாவட்ட விவசாய பிரதிநிதிகளை அழைத்து

கொள்முதல் செய்வதில் உள்ள பிரச்னைகளை கேட்டறிந்து தீர்த்து வைக்கும் நடைமுறை சில ஆண்டுகளாக பின்பற்றபடுவதில்லை. இதை தவிர்த்து முன்புபோல் விவசாய பிரதிநிதிகளை அழைத்து ஆலோசனைகளை, குறைகளை கேட்டறிந்து தீர்க்க வேண்டும்.

300 மூடைகள் இருந்தால் மட்டுமே களத்துக்கு நேரில் வந்து கொள்முதல் செய்யப்படும் முறையை சிறிது மாற்றி நூறு மூடை இருந்தாலே வயலுக்கு நேரடியாக வந்து கொள்முதல் செய்யும் புதிய முறையை அறிவித்து, அதனை இந்த சம்பா, தாளடி பருவதில் செயல்படுத்திட வேண்டும். கொள்முதல் செய்யப்படும் நெல் மூடைகள் 40 கிலோவை மாற்றி 50 கிலோ எடை மூடைக்களாக வேண்டும். விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா போஸ்ட் ஆபீஸ் மூலம் செய்தால் லஞ்ச ஊழல் முறைகேடுகள் வெகுவாக குறையும். லோடுமேன்களின் அத்துமீறல் அடாவடித்தனம் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. மூடை தூக்குபவர்களை நிலைய மாற்றம் செய்ய வேண்டும்.

கொள்முதல் நிலைய மோசடி முறைகேடுகளை தடுப்பதில் பறக்கும் படையினரின் செயல்பாடுகள் திருப்தியற்றதாக உள்ளது. மாவட்ட லஞ்ச ஒழிப்பு ஊழல் தடுப்பு துறையை சுதந்திரமாக செயல்பட அனுமதித்தால் விவசாயிகள் பணம் ரூபாய் 94 கோடி லஞ்ச ஊழலை ஒவ்வொரு சீசனிலும் தடுக்க முடியும். நெல் கொள்முதல் நிலைய மோசடி மற்றும் இதர புகார்களை முறையிட கட்டணமில்லா தொலைபேசி எண் அறிமுகப்படுத்த வேண்டும். கிராமங்கள் தோறும் ஈரப்பத கருவி செயல் விளக்கம் செய்து காண்பிக்க வேண்டும். மூன்று பஞ்சாயத்துகளுக்கு ஒன்று என்ற கணக்கில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையம்புதிதாக அமைக்க வேண்டும். நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை வாகனத்துடன் எடையிடுகின்ற கம்ப்யூட்டர் எடைமேடை அமைக்க வேண்டும்.

கொள்முதல் நிலையங்களில் வியாபாரிகள் புரோக்கர்களது ஆதிக்கம் அதிகரித்து வருவதை தடுத்து வெளி மாவட்ட வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும். இக்கோரிக்கைகள் அடங்கிய மனுவை தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் பிரகாசம், செயலாளர் விமலநாதன் ஆகியோர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தலைவர் வீரசண்முகமணியிடம் வழங்கினர்.

**கழிவு பஞ்சு ஏற்றுமதிக்குதடை விதிக்க வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,02:42 IST

மதுரை:""மத்திய அரசு கழிவு பஞ்சு ஏற்றுமதிக்கு தடை விதிக்க வேண்டும்," என மதுரை ஜவுளி ஏற்றுமதி மற்றும் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் பிரிட்டோ, செயலாளர் சிவபிரசாத், பொருளாளர் கைலாஷ் ஆர்.லாலன் கூறினர்.அவர்கள் கூறியதாவது: பருத்தி விலை ஆறு மாதங்களுக்கு முன் உயர்ந்தது. மத்திய அரசு 55 லட்சம் பேரல் பஞ்சை உடனடியாக ஏற்றுமதி செய்ய உத்தரவிட்டது. இதை 12 மாதங்களில் படிப்படியாக 4.50 லட்சம் பேரல் என்ற விகிதத்தில் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்கிறோம். ஆனால், தற்போது வரை 30 லட்சம் பேரல் பஞ்சு ஏற்றுமதியாகியுள்ளது.

இதனால், இந்தியாவில் பஞ்சு தட்டுப்பாடு நிலவுகிறது. 55 லட்சம் பேரல் பஞ்சு ஏற்றுமதியால் விவசாயிகள் பயனடைவர் என மத்திய அரசு கூறுகிறது. இதில் கழிவு பஞ்சும் அடக்கம். கழிவு பஞ்சு என்பது நூற்பாலைகளின் கழிவு. இதனால், விவசாயிகளுக்கு பாதிப்புதானே தவிர, எவ்வித பயனும் இல்லை. கழிவு பஞ்சு ஏற்றுமதியை உடனடியாக தடை செய்ய வேண்டும். இந்தியாவிலிருந்து 2009-10 ல் 5.6 கோடி டன் நூல் ஏற்றுமதியானது. தற்போது 7.2 கோடி டன் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதித்துள்ளது. மேலும் 7.65 கோடி டன் அனுமதிக்க உள்ளதாக தகவல். இது 7.2 கோடி டன்னை தாண்டக்கூடாது.நூல் விலை இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு கிலோ 65 ரூபாயாக இருந்தது. தற்போது 92 ரூபாயாக அதிகரித்துள்ளது.

பஞ்சு 1 கண்டி ( 355.6 கிலோ) விலை 24 ஆயிரத்திலிருந்து, தற்போது 44 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் உள்ளது.இதனால், தென் மாவட்டங்களில் கைத்தறி, விசைத்தறி உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள், ரெடிமேட் ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ராஜபாளையம், சங்கரன்கோவில், சுப்புலாபுரம், மதுரை, பல்லடம், சோமனூர் உட்பட பல்வேறு பகுதிகளில் 3 லட்சம் விசைத்தறிகளில், 10 லட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. நாங்கள் தொழில் நடத்த இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்றனர்.

**விவசாயக் கல்லூரி நெல்சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,00:11 IST

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் உழவியல் துறை சார்பில், பெரியகற்பூரம்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது.துறை தலைவர் பாலசுப்பிரமணியன் நீர்வள நிலவள திட்ட செயல்பாடுகள் மற்றும் ராஜராஜன் 1000 என்ற செம்மை நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரிப்பு குறித்தும், நீர் மேலாண்மை குறித்து பேராசிரியர் வீரபுத்திரன் பேசினர்.பூச்சியல் துறை பேராசிரியர்

மணிசேகரன், நோயியல் துறை இணை பேராசிரியர் தேரடிமணி, திட்ட ஆராய்ச்சியாளர்கள் செல்லதுரை, தமிழ்ச்செல்வி பங்கேற்றனர்.

**மதுரை வெங்காய குடோன்களில் சோதனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,02:43 IST

மதுரை:மதுரையில் வெங்காய மண்டிகளில் வெங்காயம் பதுக்குவது தொடர்பாக வந்த புகார்களின் அடிப்படையில், வருமான வரித்துறையினர் சோதனைகள் நடத்தினர்.வெங்காயம் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்ததால், இதை கட்டுப்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன் ஒரு பகுதியாக உள்ளூர் மார்க்கெட்டுகளில் வெங்காயம் பதுக்கி வைக்கப்படுவதும் தெரியவந்தது. மதுரையில் கீழமாரட் வீதி, சிக்கந்தர் சாவடியில் உள்ள குடோன்களில் இரண்டு நாட்களாக வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். வெங்காயம் கொள்முதல் மற்றும் விற்பனை குறித்த ஆவணங்களை அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளனர்.

**இட்டமொழியில் விவசாயகருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,02:03 IST

திசையன்விளை:இட்டமொழியில் விவசாய கருத்தரங்கம் நடந்தது.இட்டமொழியில் கருமேனியாறு உபவடிநில பகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்ட வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையினர் நடத்திய விவசாய கருத்தரங்கம் நடந்தது. இட்டமொழி பஞ்., தலைவர் டென்சிங் சுவாமிதாஸ் தலைமை வகித்து துவக்கி வைத்தார். யூனியன் கவுன்சிலர் ஞானராஜ், ராஜேந்திரன், ராமசேகர் முன்னிலை வகித்தனர்.நெல்லை வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை துணை இயக்குனர் தியாகராஜன், வேளாண்மை அலுவலர் லக்குமணன், உதவி வேளாண்மை அலுவலர்கள் முகமது ஜபருல்லா, பாலமுருகன், அபிபுல்லா பேசினர். முன்னோடி விவசாயி அற்புதராஜ் நன்றி கூறினார்.

**விவசாயிகள் கதிர்களை பிரித்தெடுக்க சாலைகளை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2011,01:31 IST

எட்டயபுரம்: கதிர்களை பிரித்தெடுக்க மாநில நெடுஞ்சாலை மாவட்ட இதர சாலைகளை களமாக விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள அனுமதி வழங்குமாறு மதிமுக.,மாநில விவசாய அணி

வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இதுகுறித்து மதிமுக.,மாநில விவசாய அணி துணை செயலாளர் வரதராஜன் மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 408 பஞ்.,களில் அனைத்து கிராமங்களுக்கும் மாவட்ட இதர சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு பணிகள் நடக்கிறது.

மேலும் விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, எட்டயபுரம் தாலுகாக்களில் பெரும்பாலான விவசாயிகள் மா னாவாரி விவசாயத்தையே செய்கின்றனர். புரட்டாசி மாதம் பெய்த பருவமழைக்கு நிலங்களில் பயிர் செய்தனர். கடந்த இருபது தினங்களாக உளுந்து, பாசி, மக்காச்சோளம், குதிரைவாளி போன்றவைகள் கதிர்களாக அறுவடை செய்யப்பட்டு வருகிறது. அறுவடை செய்யப்பட்ட உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம் போன்றவைகளை கதிர்களிலிருந்து பிரித்தெடுக்க அரசால் பெரும்பாலான கிராமங்களில் சிமெண்ட் களங்கள் அமைத்து கொடுக்கவில்லை.

ஆதலால் விவசாயிகள் தங்களது நிலங்களில் விளைந்த கதிர்களை சாலைகளில் களமாக அமைத்து தானியமாக பிரித்தெடுக்கின்றனர். விவசாயிகள் முறையான அனுமதி இல்லாமல் பயன்படுத்தி வருகின்றனர். என வே கதிர்களை பிரித்தெடுக்க தேசிய நெடுஞ்சாலைகளில் போட அனுமதி மறுக்கிறது. ஆகவே மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட இதர சாலைகளில் கதிர்களை பிரித்தெடுக்க களம் அமைத்து கொ ள்ள விவசாயிகள் நலன் கருதி அனுமதி வழங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI

## தென்னை இளநீரை பக்குவப்படுத்தி சுவைநீர் தயாரிக்கும் திட்டம் தென்னை விவசாயிகள் நலவாரியம் வரவேற்பு

*காங்கயம்,ஜன.10–*
*‘தென்னை இளநீரை பக்குவப்படுத்தி சுவைநீர் தயாரித்து, காதி கிராம தொழிற் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும்‘ என்று கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டு இருப்பதற்கு தென்னை விவசாயிகள் நலவாரியம் வரவேற்பு தெரிவித்து உள்ளது.*
*தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரிய தலைவர் ராஜ்குமார் மன்றாடியார் ஒரு அறிக்கை வெளி யிட்டு உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–*
*வரவேற்பு*

தென்னை விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் தென்னை விவசாயிகள் நலவாரியம் அமைக்கப்பட்டது.
அதைத் தொடர்ந்து, கவர்னர் உரையில் பனை, தென்னை விவசாயிகளின் நலன் கருதி பனை நுங்குச்சாறும், தென்னை இளநீரும் பக்குவப்படுத்தப்பட்டு சுவைநீராக காதி கிராம தொழிற்சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும். தென்னை விவசாயிகள் நலவாரியம் மூலம் தேங்காயை கொள்முதல் செய்து, கொப்பரை தயாரிக்கவும், இந்த வாரியம் மூலம் தயாரிக்கப்படும் தேங்காய் எண்ணெயை சத்துணவு திட்டத்தில் தற்போது பயன்படுத்தப்படும் பாமாயிலுக்கு பதில் பயன்படுத்தவும், கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யவும் இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்' என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதை தென்னை விவசாயிகள் நலவாரியமும், விவசாயிகளும் வாழ்த்தி வரவேற்கிறார்கள்.
இளநீர்– சுவைநீர்
கள் இறக்குவதற்கும், விலை குறிப்பதற்கும் அமைதியான முறையில் கள் இறக்கும் தொழிலாளர்கள், தங்களது கோரிக்கையை அரசுக்கு தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். அந்த கோரிக்கை தொடர்பாக ஒரு குழுவை அமைத்து, அதன் பரிந்துரை அடிப்படையில் சமுதாய நலன் கெடாத வகையிலும், தந்தை பெரியாரின் கூற்றுப்படி, உழைக்கும் மக்களின் உடல் சோர்வை அகற்றும் எளிய டானிக்கான கள் விற்பனையை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்றும் அரசு யோசித்துக்கொண்டு இருக்கிறது என்று, முதல்–அமைச்சர் கலைஞர் தனது கேள்விபதில் வாயிலாக கடந்த 2009–ம் ஆண்டு மே மாதம் தெரிவித்தார்.
இந்த நிலையில், 'தென்னை இளநீரை பக்குவப்படுத்தி தயாரிக்கப்படும் சுவைநீர் காதி கிராம தொழிற் சங்கங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படும்' என்ற அறிவிப்பை தென்னை விவசாயிகள் வரவேற்கின்றனர்.
இலவச மின் இணைப்பு
விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, அவர்களது விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, அவர்களது கடன் சுமையை அறவே அகற்றி, விவசாயிகளுக்கு மேலும் 2 லட்சம் கிணறுகளுக்கு புதிதாக இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்து, மற்றும் 22 லட்சம் மின் மோட்டார்களை இலவசமாக கொடுப்பதாகவும் அறிவித்து விவசாயிகளின் நலன் காக்கும் பாதுகாவலனாக விளங்கி வரும் முதல் அமைச்சருக்கு தென்னை விவசாயிகள் நலவாரியம் சார்பாகவும், தென்னை விவசாயிகள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.